# அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை 2022

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, இலங்கை

# அரையாண்டு
# அரசிறை நிலைமை அறிக்கை - 2022

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

ரணில் விக்ரமசிங்க, பா. உ.

கௌரவ அமைச்சர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

2022 ஜூன் 30 ஆம் திகதி

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கௌரவ அமைச்சரினால் வெளியிடப்பட்ட

# அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின் படி நிதி அமைச்சரானவர் வருடத்தின் ஜூன் மாதத்தின் இறுதித் தினத்தில் அரசிறை நிலைமை அறிக்கையினை பொது மக்களுக்கு சமர்ப்பிக்கவும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் கேட்கப்பட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் நோக்கம் அரசாங்கத்தின் அரசிறை உபாயத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையைப் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் கடன் பெறுகைகளின் செயலாற்றுகைகளைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வறிக்கை 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான தற்காலிக வரவு செலவுத்திட்டத்தின் வெளிப்பாடு, பேரண்டப் பொருளாதார செயற்திறன்கள், விலை மேம்பாடுகள், வெளிநாட்டு நிதி, அரசாங்கத்தின் படுகடன், உத்தியோகபூர்வ இருப்புக்கள் மற்றும் அரசுடமை வணிக நிறுவனங்களின் செயலாற்றுகைகளை கிடைத்த தகவல்களுக்கேற்ப இற்றைப் படுத்தப்பட்டு வழங்குகின்றது.

# பொருளடக்கத்தின் அட்டவணைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| **அத்தியாயம் 1** | **பொருளாதார முன்னோக்குகைகள்** | 1 |
| | மேன்நோக்கு | 1 |
| | உலக பொருளாதாரம் மற்றும் இலங்கை சூழலுக்குள் முன்னோக்கிய பார்வை | 3 |
| **அத்தியாயம் 2** | **அரசிறை அபிவிருத்திகள்** | 5 |
| | மேன்நோக்கு | 5 |
| | அரசாங்க வருமானம் | 8 |
| | அரசாங்க செலவினம் | 17 |
| | பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை | 23 |
| **அத்தியாயம் 3** | **அரசுடைமை நிறுவனங்களின் செயலாற்றுகை** | 27 |
| | மேன்நோக்கு | 27 |
| | அரசுக்குச் சொந்தமான பிரதான பத்து தொழில்முயற்சி நிறுவனங்கள் பற்றிய மதிப்பாய்வு | 27 |
| **அத்தியாயம் 4** | **வெளிநாட்டு நிதியளிப்பு** | 35 |
| | மேன்நோக்கு | 35 |
| | வெளிநாட்டு நிதியுதவி உறுதியளிப்புக்கள் | 35 |
| | வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள் மற்றும் பயன்பாடு | 35 |
| | உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி | 37 |
| | வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள் | 37 |

## பிரதான பொருளாதார குறிகாட்டிகள்

| குறிகாட்டி | காலம் | அலகு | பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | 2021 | 2022 (தற்காலிக) |
| **மெய்த்துறை** | | | | |
| பொருளாதார வளர்ச்சி | முதலாம் காலாண்டு | % | 4.0 | -1.6 |
| விவசாயம் | முதலாம் காலாண்டு | % | 6.4 | -6.8 |
| கைத்தொழில் | முதலாம் காலாண்டு | % | 6.0 | -4.7 |
| சேவைகள் | முதலாம் காலாண்டு | % | 3.5 | 0.7 |
| பணவீக்கம் (புள்ளிக்குப் புள்ளி) | மே மாத இறுதியில் | % | 4.5 | 39.1 |
| பணவீக்கம் (சராசரி) | மே மாத இறுதியில் | % | 3.9 | 14.2 |
| வேலையின்மை வீதம் | வருடாந்தம் | % | 5.1 | த.இ. |
| தொழிற்படை பங்கேற்பு | வருடாந்தம் | % | 49.9 | த.இ. |
| **அரசிறைத் துறை** | | | | |
| வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை | சன - ஏப் | ரூபா. மில். | -520,543 | -524,100 |
| மொத்த வருமானம் | சன - ஏப் | ரூபா. மில். | 481,722 | 630,908 |
| வரி வருமானம் | சன - ஏப் | ரூபா. மில். | 427,261 | 543,649 |
| வரியல்லா வருமானம் | சன - ஏப் | ரூபா. மில். | 54,461 | 87,259 |
| மீண்டெழும் செலவினம் | சன - ஏப் | ரூபா. மில். | 890,085 | 1,016,810 |
| அரசாங்க முதலீடு | சன - ஏப் | ரூபா. மில். | 114,227 | 140,999 |
| அரசாங்கப் படுகடன் | திசெ. மாத இறுதியில் | ரூபா. பில். | 17,589 | த.இ. |
| **வெளிநாட்டுத் துறை** | | | | |
| ஏற்றுமதிகள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 3,800.3 | 4,219.1 |
| அதில் விவசாய ஏற்றுமதிகள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 829.4 | 783.5 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 2,949.4 | 3,416.9 |
| புடவை மற்றும் ஆடைகள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,699.5 | 1,924.6 |
| ஏனையவை | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,249.9 | 1,492.3 |
| இறக்குமதிகள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 6,748.1 | 7,350.2 |
| நுகர்வுப் பொருட்கள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,276.5 | 1,176.6 |
| இடைநிலைப் பொருட்கள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 4,065.7 | 4,806.6 |
| அதில் பெற்றோலிய உற்பத்திகள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,390.3 | 1,922.4 |
| முதலீட்டுப் பொருட்கள் | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | 1,403.1 | 1,365.2 |
| வர்த்தக மீதி | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | -2,947.8 | -3,131.1 |
| உல்லாசப் பயணிகளின் வருகை | சன - மே | எண்ணிக்கை | 15,294 | 378,521 |
| சுற்றுலாத் துறை வருமானம் | சன - மே | ஐ.அ.டொ. மில். | 39.9(அ) | 680.7 |
| தொழிலாளர்கள் பணவனுப்பல் | சன - மே | ஐ.அ.டொ. மில். | 2,845.9 | 1,335.6 |
| முதலீட்டுப் பங்குகள் (தேறிய) | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | -107 | 92 |
| மொத்த சென்மதி நிலுவை | சன - ஏப் | ஐ.அ.டொ. மில். | -929 | -2,569 |
| மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் | ஏப்பிரல் மாத இறுதியில் | ஐ.அ.டொ. மில். | 4,471 | 1,812 |
| நாணயமாற்று விகிதம் (இறுதி மாதம்) | மே மாத இறுதியில் | ஐ.அ.மொ. இற்கான ரூபா | 199.50 | 360.76 |
| நாணயமாற்று விகிதம் (மாதாந்த சராசரி) | சன - மே | ஐ.அ.மொ. இற்கான ரூபா | 199.58 | 358.93 |
| **நாணயத்துறை** | | | | |
| நிலையான வைப்பு வசதி விகிதம் (SDFR) | மே மாத இறுதியில் | % | 4.50 | 13.50 |
| நிலையான கடன் வசதி விகிதம் (SLFR) | மே மாத இறுதியில் | % | 5.50 | 14.50 |
| நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR) | மே மாத இறுதியில் | % | 2.00 | 4.00 |
| அடிப்படை கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கி சராசர (AWPLR) | மே மாத இறுதியில் | % | 5.65 | 22.11 |
| கடன் விகிதமிடப்பட்ட வர்த்தக வங்கிச் சராசரி (AWLR) | ஏப்பிரல் மாத இறுதியில் | % | 9.73 | 11.31 |
| இலங்கையின் வங்கிக்கிடையேயான வழங்கல் விகிதம் (SLIBOR ) (I மாதம) | யூன் மாத இறுதியில் | % | 6.05 | 6.05 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (91 நாட்கள) | மே மாத இறுதியில் | % | 5.13 | 23.65 |
| திறைசேரி உண்டியல் விளைவு விகிதம் (364 நாட்கள) | மே மாத இறுதியில் | % | 5.18 | 24.30 |
| நாணய வழங்கல் வளர்ச்சி ($M_2b$) | ஏப்பிரல் 2022/ஏப்பிரல் 2021 | % | 20.4 | 20.0 |
| தனியார்த் துறைகடன் வளர்ச்சி | ஏப்பிரல் 2022/ஏப்பிரல் 2021 | % | 8.2 | 20.3 |

(அ) 2021 ஆம் ஆண்டிற்கான சராசரி தங்குமிடம் மற்றும் ஒருநாளுக்கு சராசரி செலவீனம் மீதான SLTDA இன் முடிவுகளின் அடிப்படையில் கொண்டு திருத்தப்பட்டது.

## இலங்கை : தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

| குறிகாட்டிகள் | காலம் | அலகு | பெறுமதி |
|---|---|---|---|
| **மின்சாரம்** | | | |
| மின் விநியோக மட்டம் | 2016 | % | 99.3 |
| **நீர்** | | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான அடைவு | 2021 | சனத்தொகை % | 94.4 |
| குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு | 2021 | சனத்தொகை % | 54.3 |
| **வீதிகள்** | | | |
| வீதி அடர்த்தி | 2021 | கி.மீ.$^2$ | 0.19 |
| வீதிகளின் மொத்த நீளம் | 2021 | கி.மீ. | 12,537 |
| **தொடர்பாடல்** | | | |
| செல்லிடத் தொலைபேசி உள்ளடங்கலாக தொலைபேசிக்கான அடர்த்தி | 2021 | ஒவ்வொரு 100 பேருக்கு | 148.1 |
| இணையத்தள வலைப்பின்னலுக்கான அடைவு | 2021 | ஒவ்வொரு 100 பேருக்கு | 100.4 |
| **கல்வி** | | | |
| **பொதுக் கல்வி** | | | |
| ஆரம்ப பாடசாலைகளில் இணையும் விகிதம் | 2021 | % | 94.4 |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்) | 2021 | எண்ணிக்கை | 16.0 |
| எழுத்தறிவு வீதம் (சராசரி) | 2020 | % | 93.0 |
| கணினி அறிவு வீதம் (முதல் 06 மாதங்கள்) | 2021 | % | 35.0 |
| **பல்கலைக்கழக கல்வி** | | | |
| மாணவர் / ஆசிரியர் விகிதம் | 2021 | எண்ணிக்கை | 19.7 |
| வயது குறிப்பீடு செய்யப்பட்டு இணையும் விகிதம் (வயது 19 - 23 வருடங்கள்) (அ) | 2021 | % | 8.7 |
| **சுகாதாரம்** | | | |
| வைத்தியசாலைகள் (மேற்கத்தேய மருத்துவம்) (ஆ) | 2021 | எண்ணிக்கை | 618 |
| கட்டில்கள் (ஆ) | 2021 | எண்ணிக்கை | 78,228 |
| வைத்தியசாலை கட்டில்கள் | 2020 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 3.5 |
| வைத்தியர் நோயாளர்களின் சராசரி விகிதம் | 2020 | எண்ணிக்கை | 1,167 |
| **சனத்தொகை** | | | |
| சனத்தொகை அடர்த்தி | 2021 | சதுர கி.மீ. ஆட்கள் | 353 |
| சனத்தொகை வளர்ச்சி | 2021 | % | 1.1 |
| ஆயுள் எதிர்பார்க்கை | 2017 | வருடங்கள் | 75.5 |
| சிசு மரண வீதம் | 2015 | 1000 பிறப்புகளுக்கு | 7.5 |
| தாய் மரண வீதம் | 2013 | 1000 பிறப்புகளுக்கு | 26.8 |
| பருமட்டான பிறப்பு வீதம் | 2021 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 12.9 |
| பருமட்டான இறப்பு வீதம் | 2021 | ஒவ்வொரு 1000 பேருக்கு | 7.4 |
| தங்கி வாழ்வோர் வீதம் | 2021 | % | 49.4 |
| **வறுமை** | | | |
| வறுமை ஆள் கணக்கெடுப்பு சுட்டெண் | 2019 | % | 14.3 |
| குடும்பவருமானத்தின் கிணிக் குணகம் | 2019 | குணகம் | 0.46 |
| வறுமை இடைவெளி | 2019 | % | 0.6 |
| நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பெறுமானம் | 2019 | கிலோகலோரிகள் | 2,120 |
| **சர்வதேச தரப்படுத்தல்** | | | தரம் |
| மனித அபிவிருத்தி சுட்டெண் | 2020 | 189 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 72 |
| வியாபாரம் புரிவோர் சுட்டெண் | 2020 | 190 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 99 |
| உலகளாவிய போட்டித் தண்மை சுட்டெண் | 2019 | 141 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 84 |
| பொருளாதார சுதந்திர சுட்டெண் | 2021 | 177 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 132 |
| உலகளாவிய சாமாதான சுட்டெண் | 2021 | 163 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 95 |
| இலத்திரணியல் - ஆட்சிமுறை அபிவிருத்தி சுட்டெண் | 2020 | 193 நாடுகளுடன் தரப்படுத்தலில் | 85 |

(அ) மாணவர்களின் உள்நுழைவினை மாத்திரம் உள்ளடக்குகின்றது.
(ஆ) அரசாங்கம்

# அத்தியாயம் 1

# பொருளாதார முன்னோக்குகைகள்

## மேன்நோக்கு

இலங்கையானது தற்போது வரலாற்றிலேயே மிக உயர்வான பணவீக்கம், அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் எரிசக்தி விநியோகத்தில் இடையூறுகள் ஆகியவற்றுடன் முன்னெப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. பாதகமான உள்நாட்டு முன்னேற்றங்கள் மற்றும் உலகளாவிய விநியோக காரணிகளின் கலவையானது நிலவும் நெருக்கடிக்கு பங்களித்துள்ளன. சென்மதி நிலுவையின் தொடர்ச்சியான நடப்புக் கணக்கு பற்றாக்குறைகள், பொருட்களின் விலை உயர்வு மற்றும் குறைந்த வெளிநாட்டு கையிருப்பு ஆகியவை, ரூபாயின் பெறுமதியை கடுமையாக வீழ்ச்சியடையச் செய்துள்ளன. வெளிநாட்டுக் கடன் முதிர்வுகளைத் தீர்ப்பதற்கும் அத்தியாவசிய இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் கையிருப்புகளைப் பயன்படுத்துவதால், பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு கையிருப்பு பூஜ்ஜிய நிலைக்குக் குறைந்துள்ளது. அரசிறை நிலைமை கணிசமாக பலவீனமடைந்துள்ள காரணத்தினால், பொதுப் படுகடன் தாங்குதிறனற்ற நிலையை எட்டியுள்ளது. இந்தக் காரணிகளின் விளைவாக, சர்வதேச நாணய நிதியத்தால் ஒத்துழைப்பு வழங்கப்படும் பொருளாதார சரிசெய்தல் திட்டத்திற்கு இணங்க, கடன் பொறுப்புக்களின் ஒழுங்கானதும் ஒருமித்ததுமான மறுசீரமைப்பினை உருவாக்கும் வரை, தெரிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான தற்காலிகக் கடன் நிறுத்தத்தை அரசாங்கம் அறிவித்தது.

அரசிறைப் பலவீனமானது இலங்கையின் பேரண்டப் பொருளாதார ஸ்திரமின்மைக்கு ஒரு மூல காரணமாக உள்ளது. எனவே அரசாங்கம், முதன்மையாக செலவின ஒழுங்கமைப்புடன் வருவாயை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு அரசிறை ஒருங்கிணைப்புக்கான புதிய வேலைச்சட்டகமொன்றினை ஏற்றுக்கொண்டுள்ளது. அவசரமற்ற மூலதனச் செலவுகள் மற்றும் கருத்திட்டச் செலவினங்களை ஒத்திவைப்பதன் மூலம் பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், மேலதிக நேரக் கொடுப்பனவுகளில் கடுமையான கட்டுப்பாடுகள் உட்பட மீண்டெழும் செலவினங்களை ஒழுங்கமைப்பதற்காகவும் அரசாங்கமானது 2022, ஏப்ரல் மாதத்தில் ஒரு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டது. அரசிறை ஒருங்கிணைப்பை மீட்டெடுக்க உதவும் பல வரிச் சீர்திருத்தங்களுக்கு 2022, மே 31 ஆந் திகதி அன்று, அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கப்பட்டது மட்டுமன்றி சூத்திரம் சார்ந்த செலவு பிரதிபலிப்பு எரிபொருள் விலையிடல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் மேலும் தீவிரமடையக்கூடிய பணவீக்க அழுத்தங்களைக் குறைப்பதற்கும் பொருளாதாரத்தின் வெளித் துறையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் நாணயக் கொள்கை இறுக்கப்பட்டது. அதன்படி, 2022 ஏப்ரல் 08 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிலையான வைப்பு வசதி விகிதம் மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் ஆகியவை முறையே 13.50 சதவீதம் மற்றும் 14.50 சதவீதம் என 700 அடிப்படை புள்ளிகளால் கணிசமாக அதிகரிக்கப்பட்டன. இதன் விளைவாக, சந்தை வட்டி விகிதக் கட்டமைப்பில் நிலவும் சில முரண்பாடுகளை சரிசெய்யும் அதே வேளையில் நிதி நிறுவனங்களின் வைப்புக்கள் மற்றும் கடன் தயாரிப்புகளின் மீதான வட்டி விகிதங்கள் குறிப்பிடத்தக்களவில் சரிசெய்கைகளின் அதிகரிப்பினைப் பதிவு செய்தன. அதிகரிக்கும் வட்டி விகிதங்கள் மற்றும் பலவீனமான பொருளாதார மனோபாவங்கள் காரணமாக, பங்குச் சந்தை முந்தைய சாதனை உயர் மட்டங்களில் இருந்து சரிவைக் கண்ட அதே வேளையில், அரசாங்கப் பிணையங்களும் கொள்கை இறுக்க நடவடிக்கைகளுக்கு விடையிறுக்கும் வகையில் விளைவுகளில் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

இதற்கிடையில், உணவு மற்றும் உணவு அல்லாத வகைகளின் அதிகரிப்பு காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI, 2013=100) மூலம் ஆண்டுக்கு ஆண்டு (Y-o-Y) அடிப்படையில் அளவிடப்படும் தலைக்குரிய பணவீக்கம், 2022 மே மாதத்தில் 39.1 சதவீதத்திலிருந்து 2022 ஜூன் மாதத்தில் 54.6 சதவீதமாக அதிகரித்தது. உணவுப் பணவீக்கமும் (Y-o-Y) 2022 மே மாதத்தில் 57.4 சதவீதத்திலிருந்து 2022 ஜூன் மாதத்தில் 80.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் உணவு அல்லாத பணவீக்கம் (Y-o-Y) 2022 மே மாதத்தில் 30.6 சதவீதத்திலிருந்து 2022 ஜூன் மாதத்தில் 42.4 சதவீதமாக அதிகரித்தது.

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் வெளிநாட்டுத் துறை தொடர்ந்து பல சவால்களை எதிர்கொண்டது. பண அனுப்பீடுகள் உட்பட முக்கிய வரவுகள் குறைக்கப்பட்டதுடன் சுற்றுலாத் துறையின் வருமானம் இரண்டாவது காலாண்டில் இருந்து வீழ்ச்சியடைந்த அதே நேரத்தில், முக்கியமாக உலகளாவிய பொருட்களின் விலை உயர்வுகள் காரணமாக இறக்குமதிச் செலவினங்கள் அதிகரித்திருந்தன. 2022 மே 13, வரையிலான மீளாய்வுக்குரிய ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 44.3 சதவீத சரிவைப் பதிவு செய்துள்ளது. கொவிட்-19 தொற்று காரணமாக தூண்டப்பட்ட வழங்கல் மற்றும் கேள்வி அதிர்ச்சிகள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களுடன், உலக சந்தையில் எரிபொருள் விலைகள் உட்பட வியாபாரப் பண்டங்களின் விலைகளின் உயர்வு ஆகியவற்றின் விளைவாக வெளித் துறையானது அதிக பாதிப்புகளை அனுபவிக்க நேர்ந்தது.

அட்டவணை 1.1 : பணவீக்க அசைவுகள் (%)

| வருடம் | மாதம் | கொ.நு.வி.சு. (2013=100) | | | | தே.நு.வி.சு. (2013=100) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தலைக்குரிய பணவீக்கம் | | அடிப்படையில் * பணவீக்கம் | | தலைக்குரிய பணவீக்கம் | | அடிப்படையில் * பணவீக்கம் | |
| | | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி | புள்ளிக்குப் புள்ளி | ஆண்டுச் சராசரி |
| 2021 | சனவரி | 3.0 | 4.3 | 2.7 | 3.1 | 3.7 | 5.8 | 4.2 | 4.2 |
| | பெப்ரவரி | 3.3 | 4.1 | 2.6 | 3.0 | 4.2 | 5.5 | 4.1 | 4.2 |
| | மார்ச் | 4.1 | 4.0 | 3.1 | 3.0 | 5.1 | 5.3 | 4.3 | 4.3 |
| | ஏப்பிரல் | 3.9 | 3.9 | 3.0 | 3.0 | 5.5 | 5.3 | 4.1 | 4.4 |
| | மே | 4.5 | 3.9 | 3.2 | 3.0 | 6.1 | 5.4 | 4.2 | 4.4 |
| | யூன் | 5.2 | 4.1 | 3.2 | 3.0 | 6.1 | 5.4 | 4.1 | 4.4 |
| | யூலை | 5.7 | 4.2 | 3.7 | 3.1 | 6.8 | 5.4 | 4.4 | 4.4 |
| | ஆகஸ்ட் | 6.0 | 4.3 | 4.1 | 3.2 | 6.7 | 5.5 | 4.7 | 4.4 |
| | செப்டெம்பர் | 5.7 | 4.5 | 5.0 | 3.3 | 6.2 | 5.5 | 4.8 | 4.4 |
| | ஒக்டோபர் | 7.6 | 4.8 | 6.3 | 3.6 | 8.3 | 5.7 | 7.2 | 4.6 |
| | நவம்பர் | 9.9 | 5.3 | 7.0 | 4.0 | 11.1 | 6.2 | 8.8 | 5.0 |
| | திசெம்பர் | 12.1 | 6.0 | 8.3 | 4.4 | 14.0 | 7.0 | 10.8 | 5.5 |
| 2022 | சனவரி | 14.2 | 6.9 | 9.9 | 5.0 | 16.8 | 8.1 | 12.9 | 6.2 |
| | பெப்ரவரி | 15.1 | 7.9 | 10.9 | 5.7 | 17.5 | 9.3 | 14.1 | 7.1 |
| | மார்ச் | 18.7 | 9.1 | 13.0 | 6.5 | 21.5 | 10.6 | 17.3 | 8.2 |
| | ஏப்பிரல் | 29.8 | 11.3 | 22.0 | 8.1 | 33.8 | 13.0 | 27.9 | 10.2 |
| | மே | 39.1 | 14.2 | 28.4 | 10.2 | 45.3 | 16.3 | 37.7 | 13.0 |

மூலம் : தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்

*கொ.நு.வி.சு. அடிப்படையில் பணவீக்கம்(2013=100) மாறுபடும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து நீங்கலாக

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏற்றுமதி வருவாயானது, கைத்தொழில்துறையின் ஏற்றுமதிகள் அதிகரித்ததன் விளைவாக 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ஐ.அ.டொ. 3,800 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 11 சதவீதத்தினால் அதிகரித்து ஐ.அ.டொ. 4,219 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. இறக்குமதிக்கான செலவினம், முக்கியமாக உலக சந்தையில் பண்டங்களின் விலை உயர்வுற்றதனால், 2021 ஆம் ஆண்டின் குறிப்பிட்ட காலகட்டத்தில் ஐ.அ.டொ. 6,748 மில்லியன்களாக இருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொ 7,350 மில்லியன் வரை 8.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எனவே, வர்த்தகப் பற்றாக்குறையும் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொ 2,948 மில்லியன் பற்றாக்குறையிலிருந்து 2022 முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொ 3,131 மில்லியன்களாக விரிவடைந்தது. வெளிநாட்டு நாணய வருவாயின் இரண்டாவது பெரிய ஆதாரமாக விளங்கும் தொழிலாளர்களின் பண அனுப்பீடுகள், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவான ஐ.அ.டொ 2,845.9 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஐ.அ.டொ 1,335.6 மில்லியன் வரை 53.1 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது. 2022 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சுற்றுலாத்துறையின் வருமானம் ஐ.அ.டொ 680.7 மில்லியன்களாக அதிகரித்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொ 39.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில், தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை விட மிகவும் குறைவாக உள்ளது. உலகளாவிய மற்றும் உள்நாட்டு காரணிகள் ஆகிய இரண்டினாலும் சுற்றுலாத் துறையின் நெருங்கிய காலக் கண்ணோட்டம் சாதகமற்றதாகக் காணப்பட வாய்ப்புள்ளது. 2022, ஏப்ரல் மாத இறுதியில் நாட்டின் இருப்பு நிலையானது, பயன்பாட்டின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சுமார் ஐ.அ.டொ. 1.5 பில்லியன்களுக்கு சமமான சீனாவின் மக்கள் வங்கியின் இடமாற்று வசதி (swap) உள்ளடங்கலாக ஐ.அ.டொ 1.8 பில்லியன்களென தற்காலிகமாக மதிப்பிடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள், கடன் மறுசீரமைப்பு செயல்முறையுடன் நிதி ஒத்துழைப்புப் பெற்ற பேரினப் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில், நாட்டின் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், நம்பகத்தன்மையையும் இலங்கையின் இறையாண்மை மதிப்பீடுகளையும் மேம்படுத்தவும், உலக மூலதனச் சந்தைகளுக்கான அணுகலை படிப்படியாக மீட்டெடுக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 1.2 : வெளிநாட்டு வர்த்தகம் 2022 சனவரி - ஏப்பிரல்

ஐ.அ.டொ.மில்லியன்

| வகை | 2021 | 2022 (தற்காலி.) | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **3,800.3** | **4,219.1** | **11.0** |
| விவசாய உற்பத்திகள் | 829.4 | 783.5 | -5.5 |
| தேயிலை | 417.4 | 367.2 | -12.0 |
| ஆரம்ப நிலை உற்பத்திகள் (இறப்பர், தெங்கு உற்பத்திகள்) | 139.0 | 156.6 | 12.7 |
| ஏனைய விவசாய உற்பத்திகள் | 273.0 | 259.7 | -4.9 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 2,949.4 | 3,416.9 | 15.9 |
| புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 1,699.5 | 1,924.6 | 13.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 122.1 | 238.0 | 94.9 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 1,127.8 | 1,254.3 | 11.2 |
| கனிப் பொருட்கள் | 16.0 | 12.3 | -23.1 |
| ஏனையவை | 5.6 | 6.4 | 14.3 |
| **இறக்குமதிகள்** | **6,748.1** | **7,350.2** | **8.9** |
| நுகர்வு பொருட்கள் | 1,276.5 | 1,176.6 | -7.8 |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 628.8 | 660.6 | 5.1 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 647.7 | 516.0 | -20.3 |
| இடைநிலைப் பொருட்கள் | 4,065.7 | 4,806.6 | 18.2 |
| பெற்றோலியம் | 1,390.3 | 1,922.4 | 38.3 |
| உரம் | 82.2 | 42.1 | -48.8 |
| புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள் | 938.6 | 1,161.7 | 23.8 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,654.6 | 1,680.4 | 1.6 |
| முதலீட்டுப் பொருட்கள் | 1,403.1 | 1,365.2 | -2.7 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 913.0 | 874.8 | -4.2 |
| போக்குவரத்து உபகரணங்கள் | 107.7 | 71.2 | -33.9 |
| கட்டிட மூலப்பொருட்கள் | 381.8 | 417.4 | 9.3 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.6 | 1.8 | 200.0 |
| ஏனையவை | 2.8 | 1.8 | -35.7 |
| **வர்த்தக மீதி** | **-2,947.8** | **-3,131.1** | **-6.2** |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## உலக பொருளாதாரம் மற்றும் இலங்கை சூழலுக்குள் முன்னோக்கிய பார்வை

ரஷ்யா-உக்ரைன் மோதலின் தாக்கங்களானவை உயர் பணவீக்கம் மற்றும் சென்மதி நிலுவை அழுத்தங்களுடன், இலங்கையில் பொருளாதார பாதிப்புகளை ஆழமாக்கியுள்ளது. இரஷ்யாவும் உக்ரைனும், விவசாயப் பொருட்கள், இயற்கை எரிவாயு மற்றும் மசகெண்ணெய் போன்றவற்றில் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவிற்கு (ஐக்கிய அமெரிக்கா) முக்கிய வழங்குநர்களாக இருப்பதால், இயைபான தடைகள் மற்றும் விநியோக இடையூறுகள் உலகம் முழுவதும் உணவுப்பொருட்கள் மற்றும் எரிபொருள் விலைகளைக் கடுமையாகப் பாதிக்கச் செய்தன. உலகளாவிய ரீதியில் செலவிடத்தக்க வருமானங்கள் வலியுறுத்தப்படுவதால், ஆடைகள் போன்ற உற்பத்திகளில் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேவையின் மீது பாதகமான தாக்கங்கள் ஏற்படலாம். உயர்ந்து வரும் வியாபாரப் பண்டங்களின் விலைகள் இலங்கையிலும் அதிக விலை மட்டங்கள் மற்றும் பணவீக்க அழுத்தத்திற்குப் பங்களித்துள்ளன.

வெளிநாட்டுத் துறையில் இந்த பாதகமான நிலைமைகளை எதிர்கொள்வதற்கு, தகவல் தொழிநுட்பவியல், சுற்றுலா மற்றும் பண்டக சேவைகள் போன்ற பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி ஆகிய இரண்டிற்கும் ஒத்துழைப்பு வழங்கி ஏற்றுமதி துறையில் முதலீடு செய்வது இலங்கைக்கு முக்கியமானதாகும். குறுகிய காலத்தில், சர்வதேச நாணய நிதியத்துடன் வேலைத்திட்டத்தில் நுழைவதன் மூலம் இலங்கை தனது வெளிப்புற சமநிலைக்கு உதவுதல் வேண்டும். இது இருப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்து புதிய நிதியுதவியை திறப்பதற்கும் நிதி ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் உலக மூலதனச் சந்தைகளுக்கான அணுகலை மீண்டும் பெறுவதற்கும் முதல் படியாக இருக்கும்.

# அத்தியாயம் 2

# அரசிறை அபிவிருத்திகள்

## மேன்நோக்கு

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசிறை துறை தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்தது. 2022 இல் ஒரு தடவையிலான மிகை வரி மூலமாக பெறப்பட்ட வருமானம் அதிகரித்தாலும், கடினமான மற்றும் முக்கியமாக விருப்புரிமை மீண்டெழும் செலவுகள் குறிப்பிடத்தக்கவாறு வருமானத்தை விடவும் அதிகரித்தது. இதனால், நிதிப் பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 520.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 அதே காலகட்டத்தில் ரூபா 524.1 பில்லியனாகக் காணப்பட்டது. வெளிநாட்டு நிதி ஆதாரங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு காரணமாக, நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பது தொடர்ந்து சவாலாகவே இருந்தது. எனவே பணவீக்க அழுத்தங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் இருப்புக்கான அபாயங்களுக்கு பங்களித்த நிதிப்பற்றாக்குறைக்கு நிதியிடல் தேவைப்படுகிறது.

2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் குறைந்த வருமானச் செயல்திறனுடன் ஒப்பிடும்போது,2022 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் அரசாங்கத்தின் மொத்த வருமானச் செயல்திறன் உயர்ந்து காணப்பட்டது. மானியங்கள் உட்பட அரசின் மொத்த வருமானம் 30.9 சதவீதம் அதிகரித்து 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா 631.1 பில்லியனாகவும், 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 482.3 பில்லியனாகவும் காணப்பட்டதுடன், இது ஆண்டு மதிப்பீட்டில் 28.4 சதவீத சாதனையை பெற்று ரூபா 2,223 பில்லியனாகவும் கணப்பட்டது. ஏப்ரல் 2022 இல் முதல் தவணையின் பெறப்பட்ட ஒருமுறை மிகை வரிக்கான ரூபா 59.6 பில்லியனுக்கான ரசீதுகலின் பிரதிபலிப்பாக, வரி வருமானம் குறிப்பிடத்தக்களவு 27.2 சதவீதம் அதிகரித்து 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா 543.6 பில்லியனாக காணப்பட்டது, இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 427.3 பில்லியனாக காணப்பட்டது. 2022 முதல் நான்கு மாதங்களில் மெய் வரி வருமானம் ஆண்டு மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,987.0 பில்லியனுக்கெதிராக 27.4 சதவீதமாக இருந்தது. இதேபோல், 2022 முதல் நான்கு மாதங்களில்,வரி அல்லாத வருமானம் 60.2 சதவீதம் அதிகரித்து ரூபா 87.3 பில்லியனாகவும், 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 54.5 பில்லியனாகவும் காணப்பட்டதுடன்,இது ஆண்டு மதிப்பீட்டில் 38.6 சதவீத ஓர் சாதனையாக ரூபா 226.0 பில்லியனாகவும் காணப்பட்டது.

வருமான வரிகள், பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள், உற்பத்தி வரிகள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரிகள் (PAL) மற்றும் பொருட்கள் ஏற்றுமதி மானியத் திட்டம் (CESS) தீர்வை ஆகியவற்றின் மூலமான வரி வருமானம், 2022 இன் முதல் நான்கு மாதங்களில் வருமானத் திரட்டலில் உயர்ந்த செயல்திறனை வெளிப்படுத்தியது. வருமான வரி வருமானம் 170 சதவீதம் அதிகரித்து 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா 149.2 பில்லியன் இருந்தது, மற்றும் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 55.2 பில்லியனாகக் காணப்பட்டது. 2022 முதல் நன்கு மாதங்களில், ஆண்டு மதிப்பிடப்பட்ட வருமான வரி வருமானம் ரூபா 496.0 பில்லியனுக்கு எதிராக, உண்மை வருமான வரி வருமானம் 30.1 சதவீதமாக காணப்பட்டது.

2022 முதல் நான்கு மாதங்களில் உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரிகளிலிருந்தான வருமானம் 23.9 சதவீதம் அதிகரித்து ரூபா 180.1 பில்லியனாக காணப்பட்டது, இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 145.3 பில்லியனாக இருந்தது. உள்நாட்டு நடவடிக்கைகளுக்கான உற்பத்தி வரி மூலம் பெறப்பட்ட வருமானம் 14.6 சதவீதம் அதிகரித்து 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா 94.7 பில்லியனாக காணப்பட்ட அதேவேளை,உள்நாட்டு நடவடிக்கைகளின் மீதான பெறுமதி சேர் வரியின் (VAT) வருமானம் 36.6 சதவீதம் அதிகரித்து 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா 85.3 பில்லியனாக காணப்பட்டது. மற்றும், இது 2021 இன் இதே காலப்பகுதியில் ரூபா 62.4 பில்லியனாக இருந்தது.

2022 முதல் நான்கு மாதங்களில், இறக்குமதி அடிப்படையிலான வரிகள் மூலம் பெறப்படும் வருமானம் இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி, செஸ் மற்றும் துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரிகள் போன்றவை 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 200.7 பில்லியனைக் காட்டிலும் 1.4 சதவீதம் அதிகரித்து ரூபா 203.6 பில்லியனாகக் காணப்பட்டது. இருப்பினும், முக்கியமாக இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் விசேட பண்டை அறவீடு விகிதங்களின் கீழ்நோக்கிய திருத்தங்கள் காரணமாக, சுங்க இறக்குமதி வரிகள் (CID) மற்றும் விசேட பண்டைத் அறவீடு (SCL) ஆகியவற்றிலிருந்தான வருமான சேகரிப்பு 44.7 சதவீதம் குறைவடைந்து, முறையே ரூபா 17.5 பில்லியன் ஆகவும் மற்றும் 22.9 சதவீதம் குறைவடைந்து 15.8 பில்லியன் காணப்பட்டன. இதற்கிடையில், 2021 காலப்பகுதியில், இறக்குமதி செய்யப்பட்ட அளவு, 3.4 மில்லியன் மெட்ரிக் தொன்னிலிருந்து 2022 இன் முதல் நான்கு மாதங்களில் 2.9 மில்லியன் மெட்ரிக் தொண்ணாக குறைந்ததன் காரணமாக, 2021 ஆம் ஆண்டின் முதல் நன்கு மாதங்களில் ரூபா 20.7 பில்லியன் இருந்த பெற்றோலிய பொருட்கள் மூலமான உற்பத்தி வரி வருமானம், 2022 அதே காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க வகையில் 20.4 சதவீதம் குறைந்து ரூபா 16.4 பில்லியனாகக் காணப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த அரசாங்கச் செலவுகள், 2021 ஆம் ஆண்டின் அதே

**அட்டவணை 2.1** : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான வரவு செலவுத்திட்ட சுருக்கம்

ரூபா.மில்லியன்

| விடயம் | 2021 | 2022 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **வருமானம் மற்றும் மானியங்கள்** | **482,289** | **631,129** |
| **வருமானம்** | **481,722** | **630,908** |
| வரி வருமானம் | 427,261 | 543,649 |
| வரி அல்லாத வருமானம் | 54,461 | 87,259 |
| மானியங்கள் | 567 | 221 |
| **செலவினம்** | **1,002,832** | **1,155,229** |
| மீண்டெழும் | 890,085 | 1,016,810 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 366,240 | 426,786 |
| ஏனையவை | 523,844 | 590,023 |
| அரசாங்க முதலீடுகள் | 114,227 | 140,999 |
| ஏனையவை | -1,480 | -2,580 |
| **வருமானப் பற்றாக்குறை (+)/மிகை(-)** | **-408,362** | **-385,902** |
| **மொத்த வரவு செலவுத்திட்ட மிகை (+)/பற்றாக்குறை(-)** | **-520,543** | **-524,100** |
| **நிதியீட்டம்** | **520,543** | **524,100** |
| **வெளிநாட்டு நிதியீட்டம்** | **16,994** | **-126,985** |
| கடன் பெறுகை | 127,077 | 111,742 |
| மீள் கொடுப்பனவு | -110,083 | -238,727 |
| **உள்நாட்டு நிதியீட்டம்** | **503,549** | **651,085** |
| கடன் பெறுகை | 1,397,680 | 3,564,527 |
| மீள் கொடுப்பனவு | -894,131 | -2,913,443 |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**அட்டவணை 2.2** : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையிலான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானமும் செலவினமும்

ரூபா.பில்லியன்

| விடயம் | மதிப்பிடப்பட்ட (வருடாந்த) | தற்காலிகமான (சன - ஏப்) | அடைவு (%) |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **2,213** | **631** | **28.5** |
| வரி வருமானம் | 1,987 | 544 | 27.4 |
| வரியல்லா வருமானம் | 226 | 87 | 38.6 |
| **மொத்த செலவினம்** | **3,851** | **1,155** | **30.0** |
| மீண்டெழும் செலவினம் | 2,935 | 1,017 | 34.6 |
| மூலதனச் செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள் | 916 | 138 | 15.1 |

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

காலகட்டத்தின் ரூபா 1,002.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 15.2 வீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் ரூபா 1,155.2 பில்லியனாக இருந்தது. இதில் ரூபா 1,016.8 பில்லியன் மீண்டெழும் செலவும், ரூபா 138.4 பில்லியன் மூலதனச் செலவும் மற்றும் நிகரக் கடனுதவியும் உள்ளடங்கியுள்ளது. வட்டி கொடுப்பனவுகள், மானியங்கள் மற்றும் பரிமாற்றங்கள், சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான செலவினங்களின் அதிகரிப்புடன், “சமுர்த்தி” பெறுவோருக்கு வாழ்வாதார ஆதரவைத் தொடர்வதன் காரணமாகவும், அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூபா 5,000 செலுத்துவதன் காரணமாகவும், மீண்டெழும் செலவு, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் 890.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 14.2 சதவீதம் அதிகரித்து ரூபா 1,016.8 பில்லியனாகக் காணப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், அரசாங்க செலவினம் அரசாங்க வருமானத்தை 83.0 சதவீதத்தால் விஞ்சி காணப்பட்டது. இதன் விளைவாக பாதீட்டுப் பற்றாக்குறை ரூபா 524.1 பில்லியன் ஆகும், இது 2021 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியின் ரூபா 520.5 பில்லியன் பாதீட்டுப் பற்றாக்குறையை விட 0.7 சதவீதம் அதிகமாகும்.

விரிவடைந்து வரும் நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, பாதீட்டுப் பற்றாக்குறையை மேலும் விரிவாகுவதைக் கட்டுப்படுத்த நேரடி மற்றும் மறைமுக வரிகளின் வருமானத்தை மேம்படுத்துவதற்கான திருத்த நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க, 2022 மெ 31 அன்று பெறுமதி சேர் வரியை 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும், தொலைத்தொடர்பு வரியை 11.25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் அதிகரிக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், வரி சீர்திருத்த நடவடிக்கைகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, அதாவது தனிநபர் வருமான வரிச் சலுகைகளை, ரூபா 3 மில்லியனில் இருந்து ரூபா 1.8 மில்லியன், வரி விதிக்கக்கூடிய வருமானத்தின் மீதான வரி அடுக்குகளை ரூபா 3 மில்லியன் முதல் ரூபா 1.2 மில்லியனாக குறைத்தல் போன்ற நடவடிக்கைகளை செயற்படுத்தவும் மற்றும் ஒவ்வொரு அடுக்குக்கும் 4-32 சதவீதம் வரி வீதங்களை விதிக்கவும், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், வேலைவாய்ப்பு வருமான வரி போன்றவற்றின் மீதான நிறுத்திவைப்பு வரியை கட்டாயமாக்கவும்,பெறுமதி சேர் வரியின் பதிவு வரம்பை ஆண்டுக்கு ரூபா 300 மில்லியனிலிருந்து ரூபா 120 மில்லியனாக குறைக்கவும், மற்றும் காண்டோமினியம் வீட்டு அலகுகளை விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர்வரிக்கான சலுகையை நீக்கவும், பந்தயம் மற்றும் விளையாட்டு வரி சட்டத்தில், 1988 இல.40 இல் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம், பந்தயம் மற்றும் விளையாட்டு வரியிலிருந்து வருமானத்தை அதிகரிக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், வாகனங்கள்

**அட்டவணை 2.3 : 2022 சனவரி - ஏப்பிரல் வரையில் வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையான மெய் வருமானம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | வருடாந்த மதிப்பீடு | உண்மையான (சன - ஏப்) தற்காலிகமானது |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** | | |
| வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி | 496,000 | 149,163 |
| பெறுமதிசேர் வரி உள்நாட்டு | 264,000 | 85,314 |
| தேச கட்டுமான வரி உள்நாட்டு | - | 50 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பிற | 147,807 | 3,359 |
| **உப மொத்தம்** | **907,807** | **237,887** |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| இறக்குமதி தீர்வைகள் | 115,000 | 17,505 |
| பெறுமதிசேர் வரி இறக்குமதிகள் | 160,000 | 50,832 |
| தேச கட்டுமான வரி உள்நாட்டு | | 9 |
| துறைமுக விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு | 175,000 | 62,633 |
| இறக்குமதி/ஏற்றுமதி செஸ் | 90,000 | 29,235 |
| விடே வியாபார பண்ட அறவீடு | 80,000 | 15,797 |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | - | 26 |
| உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள் | 250,000 | 62,824 |
| சிகரட் | 120,000 | 32,962 |
| பெற்றோலியம் | 75,000 | 16,446 |
| மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற | 55,000 | 13,416 |
| ஏனைய | 700 | 83 |
| **உப மொத்தம்** | **870,700** | **238,944** |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| மதுபானம்/புகையிரம் | 180,035 | 59,483 |
| **உப மொத்தம்** | **180,035** | **59,483** |
| **ஏனையவை** | | |
| தொலைத்தொடர்பு அறவீடு | 18,000 | 4,267 |
| உரிமப் பத்திர வரி மறறும் எனையவை | 10,458 | 3,068 |
| **உப மொத்தம்** | **28,458** | **7,335** |
| **மொத்த வரி வருமானம்** | **1,987,000** | **543,649** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வாங்குதல், புதிய கட்டிடங்கள் கட்டுதல், தேவையற்ற கட்டிடங்களை புணரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் என்பவற்றை தற்காலிகமாக நிறுத்துதல்,அவசரமற்ற கருத் திட்டங்கள் மற்றும் மூலதனச் செலவினங்களை ஒத்திவைத்தல், அதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நிர்ணயிக்கப்படட மீண்டெழும் செலவினங்களில் வீண்விரையத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட நிதித்தளத்தை தூண்டுவதற்கு பொது நிதியை மேலும் இறுக்கமாக்க நிதி அமைச்சின் தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 03/2022 வெளியிடப்பட்டுள்ளது. மூலதன கருத்திட்டங்களை செயற்படுத்தல்,கொள்முதல் ஆரம்ப நிலையிலுள்ள வேலை அல்லது பொருட்களை வாங்குதலை என்பவற்றை மறுபரிசீலனை செய்து தற்காலிகமாக நிறுத்த வேண்டுமென செலவுசெய்யும் நிறுவனங்கள் கோரப்பட்டுள்ளன. வெவ்வேறு தேர்ந்தெடுப்புகளின் போது, பல்வேறு பொருட்கள், மற்றும் உபகரணங்களை விநியோகிக்கும் இயல்புடைய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மானியங்கள் தவிர்த்து அரசின் மொத்த வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 481.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது 31.0 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலத்தில் ரூபா 630.9 பில்லியனாக காணப்பட்டது.

வருமான வரி (170.0 சதவீதம்), பெறுமதி சேர் வரி (33.7 சதவீதம்), துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரிகள் (16.4 சதவீதம்), சிகரெட் மீதான உற்பத்தி வரி (19.4 சதவீதம்) மற்றும் மதுபானம் (13.5 சதவீதம்) ஆகியவற்றில் இருந்து பெறப்படும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக, 2022 முதல் நான்கு மாதங்களில், வரி வருமானம், 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தின் ரூபா 427.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது 27.2 சதவீதம் அதிகரித்து ரூபா 543.6 பில்லியனாக காணப்பட்டது.

மத்திய வங்கியின் இலாப பரிமாற்றங்கள் (99.8 சதவீதம்), வாடகை (56.9 சதவீதம்), இலாபம் மற்றும் பங்குத்தொகை (61.8 சதவீதம்) அபராதம், கட்டணம் மற்றும் அறவீடுகள் (83.1 சதவீதம்) என்பனவற்றின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் வரி அல்லாத வருமானம் 2022 இல் 60.2 சதவீதம் அதிகரித்து ரூபா 87.3 பில்லியனானது. இது, 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 54.5 பில்லியனாகக் காணப்பட்டது.


**அட்டவணை 2.4 : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம்**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2021 | 2022 (தற்காலிகமானது) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **427,261** | **543,649** | **27.2** |
| வருமான வரி | 55,245 | 149,163 | 170.0 |
| உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி | 145,305 | 180,091 | 23.9 |
| பெறுமதி சேர் வரி | 62,435 | 85,314 | 36.6 |
| உற்பத்தி வரி | 82,679 | 94,726 | 14.6 |
| தேச கட்டுமான வரி | 191 | 50 | -73.6 |
| இறக்குமதி அடிப்படையிலான வரி | 200,710 | 203,582 | 1.4 |
| சுங்கத் தீர்வை | 31,644 | 17,505 | -44.7 |
| பெறுமதிசேர் வரி | 39,407 | 50,832 | 29.0 |
| தேச கட்டுமான வரி | 5 | 9 | 78.7 |
| துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 53,814 | 62,633 | 16.4 |
| விசேட வியாபார பண்ட அறவீடு | 20,500 | 15,797 | -22.9 |
| உற்பத்தி வரி | 28,574 | 27,571 | -3.5 |
| செஸ் அறவீடு | 26,766 | 29,235 | 9.2 |
| உரிமப் பத்திர வரிகள் மற்றும் ஏனையவை | 26,000 | 10,813 | -58.4 |
| **வரி அல்லாத வருமானம்** | **54,461** | **87,259** | **60.2** |
| **மொத்த வருமானம்** | **481,722** | **630,908** | **31.0** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**வரைபு 2.1 : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் அரச வருமானத்தின் பங்குகள்**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## வரி வருமானம்

மொத்த வருமானத்தில் 86.2 சதவீதமாக இருந்த வரி வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 427.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது 27.2 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலகட்டத்தில் ரூபா 543.6 பில்லியனாகக் காணப்பட்டது. நிறுவன மற்றும் நிறுவனம் அல்லாத வரி 53.7 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமை மற்றும் மிகைக் கட்டண வரி அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக, வருமான வரி வருமானம் கணிசமாக 170.0 சதவீதம் அதிகரித்து ரூபா 55.2 பில்லியனிலிருந்து ரூபா 149.2 பில்லியனாக உயர்ந்தது. மொத்த வரி வருமானத்தில், வருமான வரிகளின் பங்களிப்பானது, 2022 முதல் நான்கு மாதங்களில் 27.4 சதவீதமாக அதிகரித்தது, இது 2021 இல் இதே காலகட்டத்தில் 12.9 சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருந்தது. மிகை வரியின் பங்களிப்புடன், 2022 ஜனவரி-ஏப்ரல் மாத வரி வருமானத்தில் மறைமுக வரிகளின் பங்களிப்பு, 2021 ஜனவரி-ஏப்ரல் இன் 87.1 சதவீதத்திலிருந்து 72.6 சதவீதமாகக் குறைந்துள்ளது.

## வருமான வரி

வருமான வரி வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 55.2 பில்லியனிலிருந்து, 170.0 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலகட்டத்தில் ரூபா 149.2 பில்லியனாக காணப்பட்டது. நிறுவன மற்றும் நிறுவனம் அல்லாத வரி வருமானம் 53.7 சதவீதம் அதிகரித்து ரூபா 47.0 பில்லியனிலிருந்து ரூபா 72.2 பில்லியனாக உயர்ந்தமை இந்த அதிகரிப்புக்கு காரணமாகும். மேலும், 2020/2021 மதிப்பீட்டு ஆண்டிற்கு வரி விதிக்கக்கூடிய வருமானம் ரூபா 2,000 மில்லியனை எந்தவொரு தனிநபர், பங்காளர்கள் அல்லது நிறுவனத்தின் வருமானத்திலிருந்து விதிக்கப்பட்ட மிகை வரியின் முதல் தவணையாக 59.6 பில்லியன் பெறப்பட்டது. வரியின் இரண்டாவது மற்றும் இறுதித் தவணை ஜூலை 20, 2022 அன்று பெறப்படும். மேலும், உழைத்த வருமானத்திற்கு பணம் செலுத்துதல் (PAYE)/ முற்பண தனிநபர் வருமான வரி (APIT) 63.3 சதவீதம் அதிகரித்து ரூபா 4.4 பில்லியனிலிருந்து ரூபா 7.2 பில்லியனாகவும் மற்றும் வட்டி மீதான வரி வருமானம் 70.4 சதவீதம் அதிகரித்து ரூபா 3.3 பில்லியனிலிருந்து ரூபா 5.6 பில்லியனாகவும் அதிகரித்தது. மூலதன ஆதாய வரியும், குறிப்பிடத்தக்களவு 230.6 சதவீத அதிகரிப்புடன் ரூபா 191 மில்லியனிலிருந்து ரூபா 633 மில்லியனைப் பதிவு செய்திருந்தது. மேலும், 2022 மார்ச் இறுதியில் தன்னார்வ வெளிப்படுத்தல் வரியிலிருந்து (VDT) ரூபா 3,887 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது, 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நிதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் முன்னர் வெளியிடப்படாத வருமானம் அல்லது சொத்தை வெளிப்படுத்திய மற்றும் அத்தகைய வருமானம்/சொத்தை முதலீடு செய்த தனிநபர்கள் மீது பொது மன்னிப்பு வரியாக விதிக்கப்படுவதாகும்.

**அட்டவணை 2.5 : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் வருமான வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2021 | 2022 (தற்காலிகமானது) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| நிறுவன மற்றும் நிறுவனமல்லாத உழைக்கும் போது செலுத்தும் வரி | 46,967 | 72,184 | 53.7 |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | 4,396 | 7,177 | 63.3 |
| வட்டி வருமானம் மீதான வரி | 3,268 | 5,569 | 70.4 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 423 | 127 | -70.0 |
| மூலதன ஆதாய வரி | 191 | 633 | 230.6 |
| மிகை வரி | - | 59,586 | - |
| தன்னார்வ வெளிப்படுத்தல் வரி | - | 3,887 | - |
| **மொத்தம்** | **55,245** | **149,163** | **170.0** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## பெறுமதி சேர் வரி (VAT)

பெறுமதி சேர் வரி மூலமான மொத்த வரி வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 101.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 33.7 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலத்தில் ரூபா 136.1 பில்லியனாக உயர்ந்தது, இது, 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானத்தில் 32.1 சதவீதமாகும். 2021 முதல் நான்கு மாதங்களில்,உள்நாட்டு நடவடிக்கைகளின் மீதான பெறுமதி சேர்வரி வருமானம் 36.6 சதவீதம் அதிகரித்து ரூபா 85.3 பில்லியனாகவிருந்த அதேவேளை, இறக்குமதியிலிருந்து பெறப்படும் பெறுமதி சேர்வரி வருமானம் 29.0 சதவீதம் அதிகரித்து ரூபா 50.8 பில்லியனாகக் காணப்பட்டது. ஜனவரி 01, 2022 முதல், உலகளாவிய பொருட்களின் விலை அதிகரிப்பு, மற்றும் ஏனைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியுடன் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரித்ததன் காரணமாக பெறுமதி சேர் வரி வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது.

**அட்டவணை 2.6 : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் பெறுமதி சேர் வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2021 | 2022 (தற்காலிகமானது) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | **101,842** | **136,281** | **33.8** |
| உள்நாட்டு | 62,435 | 85,341 | 36.7 |
| இறக்குமதி | 39,407 | 50,940 | 29.3 |
| மீளளிப்புக்கள் | - | 134 | - |
| **தேறிய வருமானம்** | **101,842** | **136,147** | **33.7** |
| **மொத்த வருமான மீளளிப்பு சதவீதம் %** | - | **0.1** | - |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## உற்பத்தி தீர்வை

உற்பத்தி வரி மூலம் கிடைத்த வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 111.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது 9.9 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலகட்டத்தில் ரூபா 122.3 பில்லியனானது, இதற்கு முக்கியமாக பெற்றோலியம் மற்றும் பிற சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் வருமானம் குறைந்தாலும் மதுபானம் மற்றும் சிகரெட் மற்றும் மோட்டார் வாகனங்கள் மூலமான வருமானம் அதிகரித்தமை காரணமாகும். வருட மதிப்பீடான ரூபா 430.0 பில்லியனில், 28.4 சதவீதத்தை அடையப்பெற்றதுடன்,உற்பத்தி வரி வருமானமானது,மொத்த வரி வருமானத்தில் 22.5 சதவீதத்திற்கும், 2022 முதல் நான்கு மாதங்களில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் 19.4 சதவீதத்திற்கும் பங்களித்தது.

மதுபானங்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் 13.5 சதவீதம் அதிகரித்தனால் 2021 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 52.4 பில்லியன் 2022 இன் அதே காலத்தில், ரூபா 59.5 பில்லியனாக, முக்கியமாக நவம்பர் 12, 2021 அன்று மதுபானங்கள் மீதான உற்பத்தி வரி உயர்த்தப்பட்டதன் காரணமாக உயர்ந்தது, ஜனவரி 03, 2022 முதல் மதுபானம் மற்றும் மதுபானம் சார்ந்த தயாரிப்புகளில் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களுக்கான முகாமைத்துவ அமைப்பு தொடங்கப்பட்டது.

சிகரெட் மீதானஉற்பத்தி வரி கணிசமாக 19.4 சதவீதம் அதிகரித்து 2022 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ரூபா 33.0 பில்லியனாக இருந்தது, மேலும் 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 27.6 பில்லியனாக காணப்பட்டது. இது முக்கியமாக 2022 பாதீட்டில் சிகரெட்டுகளுக்கான வரி வீதங்கள் மேல்நோக்கிய திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாகவும் மேலே குறிப்பிட்ட மீளாய்வுக் காலத்தில் குறிப்பாக 67 மி.மீ.க்கும் குறைவான நீளம் கொண்ட சிகரெட் குச்சிகளின் மேம்பட்ட விற்பனையுடன் ஏற்பட்டது.

2020 மார்ச் தொடக்கம் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்க அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் காணப்பட்ட போதிலும், மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரி மூலமான வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 7.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது 40.4 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலகட்டத்தில் ரூபா 11.1 பில்லியனாகக் காணப்பட்டது.

இந்த காலகட்டத்தில் டீசல் இறக்குமதி குறைக்கப்பட்டதன் காரணமாக, பெற்றோலியப் பொருட்களின் வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 20.7 பில்லியனுடன் ஒப்பிடுகின்றபோது, 2022 இன் அதே காலத்தில் 20.4 சதவீதம் குறைந்து ரூபா 16.4 பில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், பிற வரி விதிக்கப்படும் பொருட்களிலிருந்தான வருமானம் முதல் நான்கு மாதங்களில், 2021 இன் ரூபா 2.7 பில்லியன் 14.0 சதவீதமாகக் குறைந்து ரூபா 2.3 பில்லியனாக வீழ்ச்சி கண்டது.


**அட்டவணை 2.7 : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி வரி செயலாற்றுகை**

ரூபா.மில்லியன்

| வரி அடிப்படை | 2021 | 2022 (தற்காலிகமானது) | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| மதுபானம் | 52,412 | 59,473 | 13.5 |
| சிகரெட்டு | 27,602 | 32,962 | 19.4 |
| மோட்டார் வாகனங்கள் | 7,921 | 11,125 | 40.4 |
| பெற்றோலியம் | 20,653 | 16,446 | -20.4 |
| ஏனையவை | 2,665 | 2,291 | -14.0 |
| **மொத்தம்** | **111,253** | **122,297** | **9.9** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

**வரைபு 2.2 : 2021 மற்றும் 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையில் உற்பத்தி வரி செயலாற்றுகை**




மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

## ஏனைய வரிகள்

2022 இன் முதல் நான்கு மாதங்களில் துறைமுக மற்றும் விமான அபிவிருத்தி அறவீடு மற்றும் செஸ் வரியிலிருந்து பெறப்பட்ட வருமானம் மிதமாக அதிகரித்துள்ளது, இருப்பினும், சுங்க இறக்குமதித்தீர்வை, விசேட பண்ட வரி (SCL) மற்றும் தொலைத்தொடர்பு வரி ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம், முதல் நான்கு மாதங்களில் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022 இல் குறைந்துள்ளது.

சர்வதேச மட்டத்தில் பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வுதான் முக்கியக் காரணமாக, துறைமுக மற்றும் விமான அபிவிருத்தி தீர்வையின் வருமான சேகரிப்பு, முதல் நான்கு மாதங்களில் 2021 இன் ரூபா 53.8 பில்லியன், கணிசமாக 16.4 சதவீதம் அதிகரித்து 2022 இல் ரூபா 62.6 பில்லியனாக காணப்பட்டது. 2022 இன், மதிப்பீட்டின் ரூபா 175.0 பில்லியனில் இது 35.8 சதவீதமாக இருந்தது. 2021 பதீட்டுடன் இறக்குமதி செஸ் வரியின் மேல்நோக்கிய திருத்தத்துடன் இணைந்து, உலக சந்தையில் பொருட்களின் விலை உயர்வின் தாக்கங்கள் மற்றும் அமெரிக்க டொலருக்கெதிரான ரூபாய் பெறுமதி இழப்பு காரணமாக, செஸ் வரி மூலமான வருமானம், முதல் நான்கு மாதங்களில் 2021 இன் ரூபா 26.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 இல், 9.2 சதவீதம் அதிகரித்து ரூபா 29.2 பில்லியனாக காணப்பட்டது. 2022இன் முதல் நான்கு மாதங்களில் செஸ் வருமான சேகரிப்பு, 2022 இற்கான ஆண்டு மதிப்பீட்டின் ரூபா 90.0 பில்லியனின் 32.5 சதவீதம் உணரப்பட்டது. 2022 இன் முதல் நான்கு மாதங்களில் பீடி இலைகள், லூப்ரிகண்டுகள் மற்றும் நெய்த துணிகளின் இறக்குமதி, போர்ட்லேண்ட் சிமெண்டிலிருந்தான அதிக வருமானம் ஈட்டப் பட்டதுடன், இறக்குமதி மீதான செஸ் வரி வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 26.1 பில்லியனாகவிருந்து, 9.5 சதவீதம் அதிகரித்து 2022 இன் அதே காலத்தில், 28.5 பில்லியனாக உயர்ந்தது. ஏற்றுமதி மீதான செஸ் வரியின் வருமானம், முதல் நான்கு மாதங்களில், 2021 இன் ரூபா 0.71 பில்லியனானது 1.5 சதவீதம் குறைந்து 2022 இல் ரூபா 0.69 பில்லியனாக காணப்பட்டது. 2022 முதல் நான்கு மாதங்களில், ஏற்றுமதிக்கான செஸ் வருமானத்திற்கு, தேயிலை, தேங்காய், இல்மனைட் மற்றும் வெளிர் க்ரீப் ரப்பர் ஆகியவை அதிக பங்களிப்பை செய்தன.

இதற்கிடையில், சுங்க இறக்குமதித் தீர்வை மூலமான வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 31.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது, 44.7 சதவீதம் குறைந்து 2022 இன் அதே காலப் பகுதியில் ரூபா 17.5 பில்லியனாக காணப்பட்டது, மேலும்,அத்தியாவசியப் பொருட்களின் மீதான விசேட பொருட்களுக்கான அறவீட்டு வீதங்கள் கீழ்நோக்கிய திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக, விசேட பொருட்களுக்கான அறவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் 22.9 சதவீதம் குறைந்து ரூபா 15.8 பில்லியனாக காணப்பட்டதுடன், 2022 முதல் நான்கு மாதங்களில் தொலைத்தொடர்பு வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம், 1.6 சதவீதம் குறைந்து ரூபா 4.3 பில்லியனாகக் காணப்பட்டது.

## வரி அல்லாத வருமானம்

அரசுடமை நிறுவனங்களிலிருந்தான வாடகை, இலாபங்கள் மற்றும் பங்குத்தொகை ஆகியவற்றிலிருந்து அதிக வருமானம் பெறப்படடமை, தொற்றுநோய்க்குப் பிறகு பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சியுடன் விற்பனை மற்றும் கட்டணங்களின் அதிகரிப்பு என்பவற்றின் பயனாக, வரி அல்லாத வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 54.5 பில்லியனாகக் காணப்பட்டு, 60.2 சதவீதம் அதிகரித்து 2022 இன் அதே காலகட்டத்தில் ரூபா 87.3 பில்லியனாக அதிகரித்தது. 2022 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானமான ரூபா 226.0 பில்லியனில் வரி அல்லாத வருமானத்தின் சேகரிப்பு, 38.6 சதவீதமாக இருந்தது.

2022 முதல் நான்கு மாதங்களில், வரி அல்லாத வருமானம், வாடகை அரசுடமை நிறுவனங்களின் (SOEs) இருந்து பெறப்படும் இலாபங்கள் மற்றும் பங்குத்தொகைகள், அபராதம், கட்டணம் மற்றும் அறவீடுகள் என்பன கணிசமாக 56.9 சதவீதம், 61.8 சதவீதம் மற்றும் 83.1 சதவீதங்களாக அதிகரித்து ரூபா 2.2 பில்லியன், ரூபா 11.4 பில்லியன் மற்றும் ரூபா 22.9 பில்லியன்களாகக் காணப்பட்டதுடன், இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் முறையே, ரூபா 1.4 பில்லியன், ரூபா 7.0 பில்லியன் மற்றும் ரூபா 12.5 பில்லியனாகக் காணப்பட்டது. மத்திய வங்கியின் இலாப பரிமாற்றங்கள், சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் ஏனைய வரி அல்லாத வருமான ஆதாரங்கள், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 15.0 பில்லியன்,ரூபா 11.3 பில்லியன், மற்றும் ரூபா 5.9 பில்லியன் காணப்பட்டதுடன் 2022 அதே காலத்தில், முறையே ரூபா 30.0 பில்லியன், ரூபா 12.1 பில்லியன், மற்றும் ரூபா 7.5 பில்லியனாக அதிகரித்துக் காணப்பட்டது. இருப்பினும், வட்டி வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 1.3 பில்லியனிலிருந்து மிதமாக 13.1 சதவீதம் சுருங்கி 2022 அதே காலத்தில் ரூபா 1.1 பில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 2.8 : அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு**

ரூபா.பில்லியன்

| விடயம் | 2021 (சனவரி - ஏப்பிரல்) | 2022 ஆண்டுக்கான மதிப்பீடு | 2022 (சனவரி - ஏப்பிரல்) | காரணம் |
|---|---|---|---|---|
| வருமான வரி | 55.2 | 496.0 | 149.2 | வருமான வரி வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் கணிசமாக ரூபா 55.2 பில்லியனிலிருந்து, 170.0 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலகட்டத்தில் ரூபா 149.2 பில்லியனாக காணப்பட்டது. இது ஆண்டு மதிப்பீட்டில் 30.1 சதவீதத்தை உணர்த்துகிறது. நிறுவன மற்றும் நிறுவனம் அல்லாத வரி வருமானம் 53.7 சதவீதம் அதிகரித்து ரூபா 47.0 பில்லியனிலிருந்து ரூபா 72.2 பில்லியனாக உயர்ந்தமைஇ மிகை வரியின் முதல் தவணையாக 59.6 பில்லியன் பெறப்பட்டது.இந்த அதிகரிப்புக்கு காரணமாகும். மேலும், உழைத்த வருமானத்திற்கு பணம் செலுத்துதல் (PAYE)/ முற்பண தனிநபர் வருமான வரி (APIT) 63.2 சதவீதம் அதிகரித்து ரூபா 4.4 பில்லியனிலிருந்து ரூபா 7.2 பில்லியனாகவும் மற்றும் வட்டி மீதான வரி வருமானம் 70.4 சதவீதம் அதிகரித்து ரூபா 3.3 பில்லியனிலிருந்து ரூபா 5.6 பில்லியனாகவும் அதிகரித்தது. மூலதன ஆதாய வரியும், குறிப்பிடத்தக்களவு 230.6 சதவீத அதிகரிப்புடன் ரூபா 191 மில்லியனிலிருந்து ரூபா 633 மில்லியனைப் பதிவு செய்திருந்தது. தன்னார்வ வெளிப்படுத்தல் வரியிலிருந்து (VDT) ரூபா 3,887 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது, வெளியிடப்படாத வருமானம் அல்லது சொத்தை வெளிப்படுத்திய மற்றும் அத்தகைய வருமானம்/சொத்தை முதலீடு செய்த தனிநபர்கள் மீது பொது மன்னிப்பு வழங்குவதற்காக விதிக்கப்படுவதாகும |
| பெறுமதிசேர் வரி வருமானம் | 101.8 | 424.0 | 136.1 | பெறுமதி சேர் வரி மூலமான மொத்த வரி வருமானம், 2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 101.8 பில்லியனுடன் ஒப்பிடும்போது 33.7 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலத்தில் ரூபா 136.1 பில்லியனாக உயர்ந்தது, இது, 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட பெறுமதி சேர் வரி வருமானத்தில் 32.1 சதவீதமாகும். இந்த வருமான செயல்திறன் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளின் பொருட்களின் உயர்ந்த விலைகளை பிரதிபலிக்கிறது முக்கியமாக பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரிப்பு, மற்றும் பணவீக்கம் (Y-o-Y CCPI) மே 2021 இல் 4.5 சதவீதத்திலிருந்து மே 2022 இல் 39.1 சதவீதமாக அதிகரித்துள்ளமை காரணங்களாகும். அனைத்து முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியுடன் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரித்ததன் காரணமாக பெறுமதி சேர் வரி வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பட்டது. |
| உற்பத்தி வரி | 111.3 | 430.0 | 122.3 | உற்பத்தி வரி மூலம் கிடைத்த வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 111.3 பில்லியனுடன் ஒப்பிடும்போது 9.9 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலகட்டத்தில் ரூபா 122.3 பில்லியனானது, இதற்கு முக்கியமாக பெட்ரோலியம் மற்றும் பிற சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் வருமானம் குறைந்தாலும் மதுபானம் மற்றும் சிகரெட் மற்றும் மோட்டார் வாகனங்கள் மூலமான வருமானம் அதிகரித்தமை காரணமாகும். வருட மதிப்பீடான 28.4 சதவீதத்தை அடையப்பெற்றது. இருப்பினும், பெட்ரோலியம் மற்றும் பிற சுத்திகரிப்பு பொருட்களிலிருந்தான வருமானம் குறைந்துள்ளது. மதுபானங்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் குறிப்பிடத்தக்க வகையில் 13.5 சதவீதம் அதிகரித்தது, மற்றும் 2021 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 52.4 பில்லியனாகவும் 2022 இன் அதே காலத்தில், ரூபா 59.5 பில்லியனாகவும், முக்கியமாக நவம்பர் 12, மதுபானங்கள் மீதான உற்பத்தி வரி உயர்த்தப்பட்டதன் காரணமாக உயர்ந்தது, சிகரெட் மீதானஉற்பத்தி வரி கணிசமாக 19.4 சதவீதம் அதிகரித்து 2022 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ரூபா 33.0 பில்லியனாக இருந்தது, இது முக்கியமாக 2022 பாதீட்டில் சிகரெட்டுகளுக்கான வரி வீதங்கள் மேல்நோக்கிய திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாகவும் மேலே குறிப்பிட்ட மீளாய்வுக் காலத்தில் குறிப்பாக 67 மி.மீ.க்கும் குறைவான நீளம் கொண்ட சிகரெட் குச்சிகளின் மேம்பட்ட விற்பனையுடன் ஏற்பட்டது. 2020 மார்ச் தொடக்கம் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைக்க அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் காணப்பட்ட போதிலும், மோட்டார் வாகனங்களின் மூலமான உற்பத்தி வரி வருமானம் ரூபா 3.2 பில்லியனாகக அதிகரித்தது, 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 7.9 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2022 அதே காலகட்டத்தில் ரூபா 11.1 பில்லியனாகக் காணப்பட்டது. இந்த காலகட்டத்தில் டீசல் இறக்குமதி குறைக்கப்பட்டதன் காரணமாக, பெட்ரோலியப் பொருட்களின் வருமானம், 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் 20.4 சதவீதம் குறைந்து ரூபா 16.4 பில்லியனாக காணப்பட்டது. எவ்வாறாயினும், பிற சுத்திகரிக்கப்படும் பொருட்களிலிருந்தான வருமானம் முதல் நான்கு மாதங்களில், 2021 இன் ரூபா 2.7 பில்லியன் 2022 ரூபா 2.3 பில்லியனாக வீழ்ச்சி கண்டது. |

| விடயம் | 2021 (சனவரி - ஏப்பிரல்) | 2022 ஆண்டுக்கான மதிப்பீடு | 2022 (சனவரி - ஏப்பிரல்) | காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா.பில்லியன் | | | |
| இறக்குமதித் தீர்வை | 31.6 | 115.0 | 17.5 | இறக்குமதி வரி வருமானம், 44.7 சதவீதத்தால் குறைந்து 2022 முதல் நான்கு மாதங்களில் முந்தைய ஆண்டின் தொடர்புடைய காலத்துடன் ஒப்பிடும்போது,ரூபா 17.5 பில்லியன் காணப்பட்டது, ஆண்டு மதிப்பீட்டில் 15.2 சதவீதத்தை கொண்டுள்ளது. அத்தியாவசியமற்ற பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியதன் விளைவாக உத்தரவாதமுடைய இறக்குமதிகளின் மூலமான இறக்குமதி வரி குறைவடைந்தமை இதற்கு முக்கிய காரணமாகும். |
| துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு | 53.8 | 175.0 | 62.6 | உலகளாவிய பெட்ரோலிய விலை உயர்வின் பயனாக, துறைமுக விமான அபிவிருத்தி அறவீட்டு வருமானம் 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் ரூபா 53.8 பில்லியனிலிருந்து 16.4 சதவீதம் அதிகரித்து 2022 அதே காலத்தில் ரூபா 62.6 பில்லியனாக உயர்ந்தது. இது 2022 ஆம் ஆண்டின் வருட மதிப்பீட்டில் 35.8 சதவிகிதம் ஆகும். |
| விசேட வியாபாரப் பண்ட அறவீடு | 20.5 | 80.0 | 15.8 | இந்த காலகட்டத்தில் பெறுமதி சேர் வரி வருமானம் கணிசமாக 22.9 சதவீதம் குறைந்துள்ளது, 2022 ஆண்டு மதிப்பீட்டில் ஏறக்குறைய 19.7 சதவீதம் பெறப்பட்டது. உள்நாட்டு கேள்வி மற்றும் விநியோகத்தை நிலையான மட்டத்தில் பராமரிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் கீழ்நோக்கிய வீத மாற்றங்கள் இச் செயத்திறனுக்கு முக்கிய காரணமாக இருந்தது. |
| ஏனைய வரிகள் | 53.0 | 267.0 | 40.1 | ஏனைய வரிகளின் வருமானம் 24.3 சதவீதம் குறைவடைந்து 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா 40.1 பில்லியனாக இருந்தது, இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் ரூபா 53.0 பில்லியனாக காணப்பட்டதுடன், 2022 இற்கான ஆண்டு மதிப்பீட்டில் 14.9 சதவீதத்தை காட்டுகின்றது. |
| வரியல்லாத வருமானம் | 54.5 | 226.0 | 87.3 | வரி அல்லாத வருமானம், 2021 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதத்துடன் ஒப்பிடுகின்ற போது 60.2 சதவீதம் அதிகரித்து. 2022 ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 38.6 சதவீதமாக இருந்தது. இதற்கு அரசுடைமை நிறுவனங்களின் வாடகை, இலாபம் மற்றும் பங்குத்தொகை, விற்பனை மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்தான உயர்ந்த வருமானச் சேகரிப்பு முக்கிய காரணமாகும். மத்திய வங்கி இலாபம் பரிமாற்றல் ரூபா 30 பில்லியன் ஆகும். |
| மொத்தம் | 481.7 | 2,213.0 | 630.9 | |

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்டது.

கட்டம் 2.1 பிரதாண அரசிறை நடவடிக்கைகள்: 2022 ஜனவரி – ஜுன்

| செயற்படுத்தும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **மதுவரி (கட்டளைச்சட்ட) தீர்வை – மதுவரிக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 52)** | |
| 01.01.2022 | மதுவரி அறிவித்தல் இல: 01/2022 (2260/78 ஆம் இலக்க, 01.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி)<br><br>3 நட்சத்திர, 4 நட்சத்திர வகுப்பு ஹோட்டல்களுக்கும், 5 நட்சத்திர அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்பு உணவுச்சாலை ஹோட்டல்கள்; உணவுச்சாலை மாளிகைகள் / பாரம்பரிய ஹோட்டல்கள் ஆகியவற்றுக்கும் 2022, மார்ச் 31 வரை, மதுபானத்தைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிப்பதற்கான கட்டணங்களிலிருந்து விலக்களித்தல். |
| 01.01.2022 | மதுவரி அறிவித்தல் இல: 02/2022 (2260/79 ஆம் இலக்க, 01.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி).<br><br>ஹோட்டல்களுக்கான வருடாந்த மதுபான அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்கு 2022, மார்ச் 31 வரை விலக்களித்தல் (FL/7, FL/8, FL/11, FL/22 B என மதுவரித் திணைக்களத்தால் வகைப்படுத்தப்பட்டவை) ஜமதுவரி அறிவித்தல் இல: 02/2021 (2208/35 ஆம் இலக்க, 01.01.2021 ஆம் திகதிய வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டுள்ளது) |
| 27.01.2022 | 2264/28 ஆம் இலக்க, 27.01.2022 ஆம் திகதிய வர்த்தமானியும், 2264/29 ஆம் இலக்க, 27.01.2022 ஆம் திகதிய வர்த்தமானியும்.<br><br>சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் (அத். 52) பிரிவு 32 இன்படி, 2021 டிசெம்பர் 10 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 08/2021 மற்றும் 09/2021 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்களை அறியத்தருதல். |
| 29.04.2022 | மதுவரி அறிவித்தல் இல: 03/2022 (2277/62 ஆம் இலக்க, 29.04.2022 ஆம் திகதிய வர்த்தமானி).<br><br>இலங்கையில் அனுமதி பெற்று உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் லீற்றரொன்றுக்கான தீர்வையை ரூபா 25/- இலிருந்து ரூபா 50/- ஆக அதிகரித்தல். |
| 08.06. 2022 | மதுவரி அறிவித்தல் இல: 04/2022 (2283/28 ஆம் இலக்க, 08.06.2022 ஆம் திகதிய வர்த்தமானி).<br><br>உள்ளூரில் விநியோகிக்கப்படும் / இறக்குமதி செய்யப்படும் எதைல் அல்ககோலின் மதுவரித் தீர்வையை அதிகரித்தல். |
| **2002 இன் 13 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டத்திற்கான பெறுமதிசேர் வரித் திருத்தங்கள்** | |
| 01.01.2022 | நிதி நிறுவனங்கள் மீது, நிதிச் சேவைகளை வழங்குவதற்கான பெறுமதிசேர் வரியை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரித்தல். |
| 01.06.2022 | 2282/26 ஆம் இலக்க, 31.05.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>பொதுவான பெறுமதிசேர் வரி விகிதத்தை 8% இலிருந்து 12% ஆக அதிகரித்தல். |
| **2022 இன் 14 ஆம் இலக்க, மிகை வரிச் சட்டம்** | |
| 07.04.2022 | 2020/2021 மதிப்பீட்டு ஆண்டில் ரூபா 2,000 மில்லியனை விஞ்சும் வரிசெலுத்தத்தக்க வருமானத்தையுடைய தனிநபர்களிடமிருந்து, பங்காண்மையாளர்களிடமிருந்து, அல்லது கம்பனிகளிடமிருந்து 25 சதவீதம் என்ற வரி விகிதத்தில் ஒரே தடவையிலான மிகைக் கட்டண வரியை அறவிடுதல். |
| **துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு – 2011 இன் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு சட்டம்** | |
| 06.01.2022 | 2261/58 ஆம் இலக்க, 06.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>அரசாங்க வைத்தியசாலைகளுக்கு அல்லது சுகாதார அமைச்சிற்கு மருத்துவ உபகரணங்கள், பொறிகள் போன்றவற்றை நன்கொடையாக வழங்குவதற்கு இந்த வரிவிலக்கை வழங்குவதற்கான, 2199/2 ஆம் இலக்க, 2020 ஒக்தோபர் 26 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலைத் திருத்துதல். |
| 12.01.2022 | 2262/19 ஆம் இலக்க, 11.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய மையப் பிரிவுகளுக்கு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி மீதான சலுகைகளையும் விலக்குகளையும் தீர்மானித்தல். |
| **செஸ் அறவீடு – 1979 இன் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்** | |
| 12.01.2022 | 2262/20 ஆம் இலக்க, 11.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>அரிசிக்கும் மீன் உற்பத்திகளுக்குமாகப HS; புதிதாக உருவாக்கப்பட்ட HS மையப் பிரிவுகளுக்கும், திரவப் பெற்றோலிய வாயுவைக் கொண்டுசெல்வதற்கான துணைப் பாகங்களுக்கும் தற்போதுள்ள செஸ் வரி விகிதத்தை ஒதுக்குதல். |
| 11.03.2022 | 2270/59 ஆம் இலக்க, 10.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி.<br><br>துணி வகைகளுக்கும் ஆடைகளுக்கும் தற்போதுள்ள செஸ் வரி விகிதத்தை அதிகரித்தல். |
| 19.05.2022 | 2280/32 ஆம் இலக்க, 18.05.2022 ஆம் திகதிய வர்த்தமானி.<br><br>2262/20 ஆம் இலக்க, 11.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலை மீளப் பிரசுரித்தல். |

| செயற்படுத்தும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| **சுங்க இறக்குமதி வரி – 1962 இன் 19 ஆம் இலக்க, வருமானப் பாதுகாப்புச் சட்டம்** | |
| 12.01.2022 | 01/2022 ஆம் இலக்க, வருமானப் பாதுகாப்புக் கட்டளை (2262/14 ஆம் இலக்க, 11.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்). தேசிய HS குறியீட்டு உப பிரிவுகளை உருவாக்குதல்.<br><br>திரவப் பெற்றோலிய வாயுவுக்கான துணைப் பாகங்களின் தரத்தை மதிப்பிடுதலும் கண்காணித்தலும்.<br><br>மீன் உற்பத்திகளின் இறக்குமதி மற்றும் சந்தைத் தகவல்களைக் கண்காணித்தல்.<br><br>திசு வளர்ப்புப் கூடங்களின் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் சந்தைத் தகவல்களைக் கண்காணித்தல்.<br><br>பழுப்புச் சீனியையும் வெள்ளைச் சீனியையும் அடிப்படையாகக் கொண்ட ICUMSA பெறுமதியைத் தெளிவாக அடையாளங் காணுதலும், பழுப்புச் சீனி உற்பத்தியை ஊக்குவித்தலும்.<br><br>பாஸ்மதி மற்றும் ஏனைய அரிசி வகைகளையும் வகைப்படுத்துவதிலுள்ள மற்றும் இலகுவில் அடையாளங்காண்பதிலுள்ள சிக்கல்களை நீக்குதல். |
| 10.03.2022 | 02/2022 ஆம் இலக்க, வருமானப் பாதுகாப்புக் கட்டளை (2270/20 ஆம் இலக்க, 09.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்).<br><br>இறக்குமதியை ஊக்குவிக்காது அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை ஆகக்குறைப்பதற்காக, தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீது சுங்க இறக்குமதி வரியை அதிகரித்தல். |
| **விசேட வியாபார பண்டங்கள் அறவீடு – 2007 இன் 4 ஆம் இலக்க, விசேட வியாபார பண்டங்கள் அறவீடு சட்டம்.** | |
| 01.01.2022 | 2260/72 ஆம் இலக்க, 31.12.2021 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>ஆறு மாத காலத்திற்கு உருளைக் கிழங்கிற்கும் பெரிய வெங்காயத்திற்குமான இறக்குமதிக்குரிய விசேட பண்டங்கள் வரியை ரூபா 30/- ஆல் குறைத்தல். |
| 12.01.2022 | 2262/15 ஆம் இலக்க, 11.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>ஆறு மாத காலத்திற்கு அரிசிக்காகவும் சீனிக்காகவும் உருவாக்கப்பட்ட புதிய HS குறியீட்டின்படி, தற்போதுள்ள வரி விகிதங்களை நீடித்தல். |
| 04.03.2022 | 2269/48 ஆம் இலக்க, 03.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>சிறிய அளவிலான கால்நடை உணவுத் தயாரிப்பாளர்களது மூலப்பொருள் தேவைகளையும், பறவை தொடர்பான தயாரிப்புகளின் விலைகளைப் பேணுதலையும் கவனத்திற்கொண்டு, சோழம் இறுங்கு ஆகியவற்றின் மீது சலுகை வரியாக கிலோ ஒன்றுக்கு ரூபா 10/- ஐ அறிமுகப்படுத்துதல். |
| 04.03.2022 | 2269/56 ஆம் இலக்க, 03.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>உள்ளூரில் மீனைத் தகரத்தில் அடைக்கும் தொழிலைப் பாதுகாப்பதற்காகவும், நுகர்வோருக்கான விலையைப் பேணி, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், ஒரு வருட காலத்திற்கு, மெக்கரல் மீன், உழுந்து, கௌபி, குரக்கன், தினை ஆகியவற்றின் இறக்குமதி மீது விசேட பண்டங்கள் வரிக்கான காலத்தை நீடித்தல். |
| 10.03.2022 | 2270/19 ஆம் இலக்க, 09.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>இறக்குமதியைக் குறைப்பதற்காக, யோகர்ட் மற்றும் பட்டர் கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 1000/- ஆகவும், சீஸ் கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 400/- ஆகவும், பேரீச்சம்பழம் மற்றும் தோடம்பழம் கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 200 ஆகவும், திராட்சைப்பழம் அப்பிள் மற்றும் ஏனைய பழங்கள் கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 300/- ஆகவும், ஆறு மாத காலத்திற்கு, விசேட பண்டங்கள் வரியை அதிகரித்தல். |
| 28.03.2022 | 2273/1 ஆம் இலக்க, 28.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>ரம்ஸான் பெருநாளைக் கருத்திற்கொண்டு, பேரீச்சம்பழங்களின் இறக்குமதிக்காக ரூபா 199/- வரிக்குறைப்பை வழங்குதல். |
| 14.04.2022 | 2275/2 ஆம் இலக்க, 13.04.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>ஆறு மாத காலத்திற்கு, மைசூர்ப் பருப்பு, மீன், மாசிக்கருவாடு, பாசிப்பயறு, மங்குஸ்தான், கிவி பழங்கள் ஆகியவற்றின் இறக்குமதி மீதான விசேட பண்டங்கள் வரிக்குரிய காலத்தை நீடித்தல். |
| **ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்கள ஒழுங்குவிதிகள்** | |
| 12.01.2022 | 2022 இன் 03 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடுகள்) ஒழுங்குவிதிகள் (2262/18 ஆம் இலக்க, 12.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்).<br>நீளமான அளவுள்ள அரிசி இறக்குமதி மீதான தற்காலிகத் தடையை நீக்குதல்.<br>புதிய HS குறியீட்டின்படி, மீன் சதை மீதான கட்டுப்பாடுகளைத் தொடருதல். |
| 09.03.2022 | 2022 இன் 05 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடுகள்) ஒழுங்குவிதிகள் (2270/18 ஆம் இலக்க, 09.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்).<br>தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டு வரிகளை விதித்தல். |

| செயற்படுத்தும் திகதி | நடவடிக்கைகள் |
|---|---|
| 09.04.2022 | 2022 இன் 06 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாடுகள்) ஒழுங்குவிதிகள் (2274/42 ஆம் இலக்க, 09.04.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்).<br><br>தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீது இறக்குமதிக் கட்டுப்பாட்டு வரிகளைச் சுமத்துதல். |
| **2003 இன் 25 ஆம் இலக்க நிதிச்சட்டம்** | |
| **புறப்படுகை அறவீடு** | |
| 27.03.2022 | 2272/53 ஆம் இலக்க, 27.03.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>இரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையத்தை பிராந்தியத்திற்குரிய சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதை ஊக்குவிக்குமுகமாக, அங்கிருந்து விமானம் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறும் பயணிகளுக்கு இறங்குதுறை வரியை 50 சதவீதத்தால் அமெரிக்க டொலர்கள் 30 இற்குக் குறைத்தல். |
| 29.04.2022 | 2277/63 ஆம் இலக்க, 29.04.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>மத்தளை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து புதிய சர்வதேச விமான சேவைகள் மூலம் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு இறங்குதுறை வரியை விதிக்காமல் விடுவதை நீடித்தல். |
| **2008 இன் 14 ஆம் இலக்க, மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்** | |
| 18.01.2022 | 2263/03 ஆம் இலக்க, 18.01.2022 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல்.<br><br>HCL ரெக்னோலஜீஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் ஏற்றுமதிக்காக மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைகளை விருத்தி செய்வதற்குரிய கருத்திட்டத்திற்கு விலக்களிப்புகளை வழங்கி, உரிய தகவல்களைப் பிரசுரித்தல். |

## அரசாங்க செலவினம்

2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 1,002.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022 இன் முதல் நான்கு மாதங்களின் போது அரசாங்க செலவினம் 15.2 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,155.2 பில்லியனாகக் காணப்பட்டது. வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் அதிகரித்ததனால், 2021 இதே காலப்பகுதியில் ரூபா 890.1 பில்லியனாகக் காணப்பட்ட மீண்டெழும் செலவினம் 2022 இன் முதல் நான்கு மாதங்களின் போது 14.2 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,016.8 பில்லியனாகக் காணப்பட்டது. மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் 2021 இல் இதே காலப்பகுதியில் ரூபா 112.7 பில்லியனிலிருந்து 2022 முதல் நான்கு மாதங்களின் போது 22.8 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 138.4 பில்லியனாகக் காணப்பட்டது.

**அட்டவணை 2.9 : அரசாங்கத்தின் செயலாற்றுகை மற்றும் தேறிய செலவினம், சனவரி - ஏப்ரல் 2022**

ரூபா.மில்லியன்

| விடயம் | 2021 | 2022 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **890,085** | **1,016,810** |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 274,044 | 316,051 |
| ஓய்வூதியக் கொடுப்பனவு | 87,345 | 99,659 |
| வட்டிக் கொடுப்பனவு* | 366,240 | 426,786 |
| ஏனையவை | 162,455 | 174,313 |
| **மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்** | **112,748** | **138,419** |
| **மொத்தம்** | **1,002,832** | **1,155,229** |

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனுக்கான இணையக் கட்டணங்கள் மற்றும் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் மீதான தள்ளுபடி உள்ளடங்கலாக

## வட்டிக் கொடுப்பனவுகள்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2022 இன் முதல் நான்கு மாதங்களின் போது, 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 366.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 426.8 பில்லியனாக 16.5 சதவீதத்தினால் அதிகரித்தது. 2021 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட கடனில் வெளிநாட்டு வெளிப்பாட்டைக் குறைப்பது தொடர்பான அரசாங்கக் கொள்கையின் பயனாக, வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல், 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூபா 92.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் முதல் நான்கு மாதங்களில் 8.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்து ரூபா 84.9 பில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், உள்நாட்டு கடனுக்கான வட்டி செலுத்துதல் 2021 இதே காலகட்டத்தில் 273.8 பில்லியனிலிருந்து 24.8 சதவீதம் அதிகரித்து 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 341.9 பில்லியனாகக் காணப்பட்டது.

## சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபைகள் உள்ளடங்களாக அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் மீதான செலவினம் 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 316.1 பில்லியனாக 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 274.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 15.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கிடையில், ஓய்வூதியக் கொடுப்பனவானது 2022 இன் முதல் நான்கு மாதங்களில் 2021 இன் இதேகாலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 87.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 99.7 பில்லியனாக 14.1 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 சனவரியிலிருந்தும் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றும் ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் வழங்கப்படும் ரூபா 5,000 மாதாந்தக் கொடுப்பனவும் இந்த அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது.

## நலன்புரிச் செலவினம்

2022 இன் முதல் நான்கு மாதங்களின் போது பாடசாலை சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் நலன்புரி கொடுப்பனவுகள் மற்றும் மானியங்கள், சமுர்த்தி நிவாரணம், வயோதிபர் கொடுப்பனவு, மாற்றுத் திறனுடைய இராணுவ வீரர்களுக்கான உதவி, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உணவுப் பொதி, விசேட மானியம் மீதான செலவினமாக ரூபா 191.2 பில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

சமுர்த்தி கொடுப்பனவை மாதம் 1,000 ரூபாயினால் அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தின் காரணமாக, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி பண உதவிக்கான செலவு 2021 ஆம் ஆண்டின் இதே காலத்தில் காணப்பட்ட ரூபா 17,271 மில்லியனிலிருந்து 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 20,679 மில்லியனாக அதிகரித்தது.

அரச மருத்துவமனைகளுக்கான மருந்துப் பொருட்களை உள்ளடக்கிய சுகாதாரம் மற்றும் சத்துணவு திட்டத்துக்கான அரசின் செலவு 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூபா 20,143 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 19,655 மில்லியனாக 2.4 சதவீதத்தினால் குறைவடைந்தது. இத்திட்டங்கள் தொடர்பான புதிய கொள்கை முன்முயற்சிகளை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதன் விளைவாக, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து உணவுப் பொதி, பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் திட்டம் மற்றும் பாடசாலை சிறுவர்களுக்கான சுகாதாரக் காப்பீடு ஆகியவற்றுக்கான செலவினம் குறைவதால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் பாதணிகள் போன்ற கல்வித்துறை மீதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் செலவினம் 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 2,592 மில்லியனாகக் காணப்பட்டது. உலகச் சந்தையில் உரத்தின் விலை

அதிகரித்ததன் காரணமாக 2021 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா. 7,140 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022 இன் முதல் நான்கு மாதங்களின்போது உரம் மற்றும் பயிர் மானியத்துக்காக அரசாங்கம் ரூபா. 14,925 மில்லியனைச் செலவிட்டுள்ளது.

வழமையான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாகத் தற்பொழுது நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைக் கருத்திற் கொண்டு சமூகத்திலுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு மேலதிக நிவாரணங்களை வழங்குகின்ற செயன்முறையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களின் மூலம் சமூகப் பாதுகாப்புமீதான அவசர செலவினத்திற்கான இக்கருத்திட்ட நிதியின்மூலம் பயன்படுத்துவதற்கு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் உதவிகள் பெறப்பட்டுள்ளன. ‘‘சமுர்த்திப்’’ பணியாளர்கள் மற்றும் வயோதிபர்கள், அங்கவினமுற்றவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் போன்ற பயன்பெறுநர்களுக்காக ரூபா 5,000 இனை அரசாங்கம் வழங்கியதுடன் 2022 மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை காத்திருப்புப் பட்டியலிலுள்ள இவ்வாறான பயன்பெறுநர்களும் இதில் உள்ளடங்குவர். குடும்பங்களிலுள்ள தேவையுடையவர்களுக்கு ஒத்துழைப்புகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நலன்புரி உதவிகளைப் பெறுகின்ற பயனாளர்களை இனங்காண்பதற்கு அரசாங்கம் வெளிப்படையானதும் நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டதுமான செயன்முறையினைத் தாபிப்பதற்கு முயன்று வருகின்றது. முன்னேற்றகரமான இலக்கானது பயன்பெறுநர்களுக்கு அதிக ஒதுக்கீடுகளை வழங்குவதுடன் பயன் பெறுநர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியான பண மாற்றம் இடம்பெறும். இந்தத் திட்டமானது எதிர்வருகின்ற மாதங்களில் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**அட்டவணை 2.10 : பிரதான நலன்புரி செலவினம்: 2022 சனவரி – ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| நிகழ்ச்சித்திட்டம் | 2022 (தற்காலிக) |
|---|---|
| **சமூக நலன்புரி** | |
| சமுர்த்தி நிவாரணம் | 20,679 |
| குறை வருமான அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு | 1,437 |
| வயோதிபர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 3,334 |
| சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி ஒத்துழைப்பு | 774 |
| ‘‘ரணவிரு மாபிய ரக்கவரண’’ கொடுப்பனவு | 634 |
| வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணம் | 16 |
| முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு | 110 |
| மரணம் மற்றும் அங்கவீனமுற்ற படையினருக்கான சேவை நட்டஈடு | 13,483 |
| **சுகாதார மற்றும் போசாக்கு** | |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 2 |
| கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்குணவு பொதி | 1,129 |
| பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம் | 301 |
| பசும்பால் நிகழ்ச்சித்திட்டம் - பாடசாலை சிறுவர்கள் | - |
| பாடசாலை மாணவர்களுக்கான சுகாதார காப்புறுதி | 143 |
| முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு | 21 |
| அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ வழங்கல்கள் (ஆயுர்வேத) | 19,655 |
| **கல்வி** | |
| பாடசாலை பாடப்புத்தகங்கள் | 374 |
| பாடசாலை சீருடைகள் | 1,244 |
| கஷ்ட மற்றும் மிகக் கஷ்ட பாடசாலைகளில் மாண-வர்களுக்கான பாதணிகள் | 400 |
| புலமைப்பரிசில் - தரம் 5 மாணவர்கள் | 64 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைகள் | 450 |
| பல்கலைக்கழக மாணவர்களுக்கான மடி கணனி மற்றும் வைபை வசதிகளுக்கான வட்டி மானியம் | 1 |
| அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம் | 1.1 |
| மாணவர்களுக்கான தம்ம பாடசாலை பாடப்புத்தகம் | - |
| தம்ம பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகள் | 58 |
| **மானியங்கள்** | |
| பசளை மற்றும் பயிர் மானியம் | 14,925 |
| **ஏனைய மானியங்கள்** | |
| இ.போ.ச வருமானமீட்டாத பாதைகளுக்கான மானியம் மற்றும் படைவீரர்களுக்கு பருவச்சீட்டு மற்றும் பேரூந்து அனுமதிப்பத்திரங்கள் | 2,850 |
| **மொத்தம்** | **82,085** |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

### துறைரீதியான செலவினம்

#### பாடசாலைக் கல்வி

2022 இன் முதல் நான்கு மாதங்களின் போது, பாடசாலைக் கல்விக்காக மத்திய அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 96,707 மில்லியன் என்பதுடன் இதில் மீண்டெழும் செலவினத்திற்காகவும் மூலதனச் செலவினத்திற்காகவும் முறையே ரூபா 95,189 மில்லியன் மற்றும் ரூபா 1,518 மில்லியன் செலவிடப்பட்டது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் 2022 ஜனவரியிலிருந்து 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட கொள்கை தீர்மானம் காரணமாக 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மீண்டெழும் செலவினம் 17 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

கோவிட்-19 தொற்று நோய் காரணமாக திட்டமிடப்பட்ட பரீட்சைகள் பாதிக்கப்பட்டதுடன் செலவினத்தின் தன்மையினையும் பாதித்தது 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிம்போது பரீட்சைகளை நடாத்துவதற்கான செலவினம் 57 சதவீதத்தனால் வீழ்ச்சியடைந்தது. 2022 சனவரி மற்றும் பெப்ருவரியில் நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த (உ.த.) பரீட்சைகளை நடாத்துவதற்கான கொடுப்பனவுகள் இன்னும் தீர்க்ப்படவில்லை.

பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலைக் கல்வி கணிசமான அளவில் பாதிக்கப்பட்டுள்ளதால சில நலன்புரித்திட்டங்கள் அதாவது பாடசாலை பால் நிகழ்ச்சித்திட்டம், பாடசாலை சத்துணவு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவை செயல்படுத்த முடியாமற் போனதனால் நலன்புரிச் செலவு 18.5 சதவீதம் குறைந்துள்ளது.

**அட்டவணை 2.11: 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரை பாடசாலைக் கல்வி தொடர்பான பிரதான செயற்பாட்டுச் செலவினம்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2021 | 2022 (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பாடசாலை ஆசிரியர்கள், ஏனைய பதவியனருக்கான வேதனாதிகள் | 69,059 | 84,089 |
| தேசிய | 14,224 | 25,519 |
| மாகாண | 54,835 | 58,570 |
| நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் | 4,369 | 3,558 |
| பரீட்சை மதிப்பீடு | 702 | 299 |
| **மூலதனச் செலவினம்** | | |
| பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 403 | 386 |
| ஆசிரிய அபிவிருத்தி | 98 | 10 |
| கல்வியில் தரமான அபிவிருத்திச் சீர்திருத்தங்கள் | 25 | 59 |
| மாகாணக் கல்வி | 470 | 582 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

#### உயர் கல்வி

நிதித் துறையில் அதிகரித்து வரும் அழுத்தத்தைக் குறைக்க எடுக்கப்பட்ட செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக 2022 இன் முதல் நான்கு மாதங்களின்போது, பல்கலைக்கழக கல்விமீதான மொத்த செலவினம் ரூபா 21,280 மில்லியனாக 8.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பிரதானமாக, 2022 இன் சனவரி மாதத்திலிருந்து 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதன் காரணமாக முதல் நான்கு மாதங்களுக்கான மீண்டெழும் செலவினம் 3.5 சதவீதத்தினால் அதிகரித்ததுடன், ரூபா 18,320 மில்லியனாகக் காணப்பட்டது. 2021 இல் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மூலதனச் செலவினம் 47 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 2,960 மில்லியனாகவும் காணப்பட்டது.

**அட்டவணை 2.12 : உயர் கல்வியின் பிரதான செயற்பாடுகளுக்கான செலவினம் சனவரி - ஏப்ரல் 2022**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2021 சன - ஏப் | 2022 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் ஆள்சார் வேதனாதிகள் | 15,221 | 16,585 |
| மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைக் கொடுப்பனவு | 600 | 450 |
| **மூலதனச் செலவினம்** | | |
| உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினைத் துரிதப்படுத்தல் | 1,595 | 970 |
| கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி (இ.அ/குவைத்) | 574 | 360 |
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ/ஆசிய அபிவிருத்தி வங்கி) | 904 | 905 |
| வயம்ப பல்கலைக்கழக டவுன்ஷிப் அபிவிருத்தித் திட்டம் (இ.அ/சவூதி) | 1.6 | 386 |
| மடிக் கணணிக்கான கடன் வட்டி (பல்கலைக்கழக மாணவர்கள்) | 1 | 1 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

#### திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி

திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கான மொத்தச் செலவினம் ரூபா 2,494 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இதில் 2022 இன் முதல் நான்கு மாதங்களுக்கான மீண்டெழும் செலவினமாக ரூபா 2,283 மில்லியன் மற்றும் மூலதன செலவினமாக ரூபா 211 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.13 : திறன் அபிவிருத்தி பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் 2022 சனவரி - ஏப்ரல்**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2021 சன - ஏப் | 2022 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|
| தொழிற்கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 3 | 36 |
| 7 தொழிநுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சிக் கல்லூரிகளின் நவீனமயக்கல் | - | 35 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

## சுகாதாரம்

2022 முதல் நான்கு மாதங்களில் 2021 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், மாகாண மற்றும் மத்திய அரசின் சுகாதார செலவினங்களை உள்ளடக்கிய மேற்கத்திய மற்றும் சுதேச மருத்துவத் துறைகள் உட்பட சுகாதாரத்திற்கான மொத்த அரசாங்கச் செலவினம் 4.8 சதவீதமாக அதிகரித்து ரூபா 95,729 மில்லியனாகக் காணப்பட்டது. மொத்த சுகாதாரச் செலவில் மீண்டெழும் செலவினம் ரூபா 87,447 மில்லியன் என்பதுடன் மூலதன முதலீடு ரூபா 8,281 மில்லியனாகும். மருந்துப் பொருட்கள், மீண்டெழும் செலவினங்களில் முக்கிய வகைகளில் ஒன்றான ரூபா 20,143 மில்லியன் மருந்துகள், சத்திரசிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.14 : சுகாதாரத் துறையில் பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் சனவரி - ஏப்ரல் 2022**

ரூபா.மில்லியன்

| விபரம் | 2021 சன - ஏப் | 2022 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|
| **மொத்த மீண்டெழும் செலவினம்** | **83,242** | **87,447** |
| சேவை வழங்கல் செலவினம் | 44,352 | 47,786 |
| அதில் மருத்துவ அலுவலர் மற்றும் துணை அலுவலர் சம்பளங்கள் | 34,693 | 37,233 |
| மருந்துப் பொருள் வழங்கல் | 20,143 | 19,637 |
| மாகாண சுகாதாரம் | 18,747 | 20,024 |
| **அரச முதலீட்டுச் செலவினம்** | **8,054** | **8,281** |
| மருத்துவ உபகரணம் | 1,282 | 172 |
| சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் - ஆ.அ. வங்கி | 824 | 286 |
| இலங்கை கொவிட் 19 அவசர பொறுப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைக் கருத்திட்டம் (உ.வ) | 804 | 3,323 |
| கராபிட்டிய, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் விஷேட சிறுவர் மருத்துவ பராமரிப்புக் கட்டிடத் தொகுதியினைத் தாபித்தல். | 185 | - |
| தெரிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளின் சுகாதார வசதிகளை தரமுயர்த்தல் | 175 | 449 |
| நிரல் அமைச்சு வைத்தியசாலைகளின் கீழ் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தல் | 109 | 58 |
| அம்புலெட்டர் பராமரிப்பு மைய அபிவிருத்தி (GOSL_ சீனா) | 98 | 2 |
| உயர் சக்தி கதிரியக்கத்துடன் இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கான உயர் தர கதிரியக்க சிகிச்சை ஏற்பாடு | 69 | - |
| தாதியர் பீடம்/ விடுதி நிர்மாணம் | 5 | 50 |
| ஏனைய மூலதன முதலீடுகள் | 4,493 | 2,924 |
| மாகாண சுகாதார முதலீடு | 1,377 | 1,017 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

## நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம்

2022 முதல் நான்கு மாதங்களில் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் உட்பட நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவத்துக்கான மொத்த முதலீடு ரூபா 11,364 மில்லியன் ஆகும். 2021 இல் முதலீடு ரூபா 8,807 மில்லியன் உடன் ஒப்பிடுகையில், 2022 இல் 29.9% அதிகரித்துள்ளது. 2022 இல் இது 4,304 மில்லியன் ரூபாவாகும். நீர்ப்பாசன முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் மீதியான ரூபா 8,460 மில்லியன் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டது.

## விவசாயம்

பெருந்தோட்டம், கால்நடைகள், மீன்பிடி மற்றும் நில அபிவிருத்தி உள்ளிட்ட விவசாயத் துறைக்கான மொத்தச் செலவு 2022 முதல் நான்கு மாதங்களில் ரூபா. 20,195 மில்லியனாக 15% சதவீதத்தினால் அதிகரித்தது. இதில் ரூபா 14,599 மில்லியன் உர உற்பத்தி மற்றும் விநியோகம் மற்றும் இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றிற்காக செலவிடப்பட்டுள்ளது. பயிர் விவசாயத்திற்காக 3,858 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. பெருந்தோட்டத்துறை அபிவிருத்திக்காக 1,369 மில்லியன், மீன்பிடி அபிவிருத்திக்காக ரூபா. 290 மில்லியன், ரூபா 18 மில்லியன் நில அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்திக்கான மீதியானது உள்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கும் பயனாளிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும்.

## நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு

பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான சுகாதார சேவைகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன்களின் சேவை உட்பட, 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 8,115 மில்லியன். இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 72.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. 248 திட்டங்களை உள்ளடக்கிய "அனைவருக்கும் தண்ணீர்" என்ற தேசிய திட்டம், உற்பத்தி திறனை மேம்படுத்துதல், புதிய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் முழு மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்வதற்கான

தற்போதைய திட்டங்களை விரைவுபடுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த ஆண்டும் செயல்பட்டு வருகிறது.

**அட்டவணை 2.15: நீர் வழங்கல், கழிவு நீரகற்றல் கருத்திட்ட செலவினம் : சனவரி - ஏப்ரல் 2022**

ரூபா.மில்லியன்

| கருத்திட்டம் | 2022 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|
| "அனைவருக்கும் நீர்" அகில இலங்கை நீர் வழங்கல் கருத்திட்டம் | 1,633 |
| கண்டி வடக்கு மற்றும் பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ./சீனா) | 1,619 |
| பாரிய மாத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ./பிரான்ஸ்) | 1,000 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் 2 (இ.அ/ஆ.அ.வ) | 733 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கருத்திட்டம் - 3 (இ.அ./ஆஅவ) | 705 |
| தெதுருஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் (இ.அ./கொரியா) | 563 |
| நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் (இ.அ/உ.வ) | 324 |
| அம்பதலே நீர்வழங்கல் முறைமை மேம்பாடு மற்றும் சக்தி சேமிப்பு கருத்திட்டம் (இ.அ/பிரான்ஸ்) | 290 |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

## நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள்

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களுக்கான செலவு ரூபா 36,398 மில்லியன், இது 2021 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது சுமார் 6 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த தொகையில் தேசிய மற்றும் கிராமப்புற நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுக்காக ரூபா 16,123 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதன் கீழ் ரூபா 10,613 மில்லியன்கள் ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தித் திட்டத்திற்காக (i- Road) செலவிடப்பட்டுள்ளது, 6,000 கி.மீ. க்கும் அதிகமான கிராமப்புற மற்றும் மாகாண பாதைகளை புனரமைத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள அதேவேளையில், குறிப்பாக கிராமப்புறங்களில் இணைப்பை மேம்படுத்துவதற்கும் நகர்ப்புறங்களில் போக்குவரத்து நெரிசலை நிவர்த்தி செய்வதனையும் இலக்காகக் கொண்டு பிரதான வீதிகளை அணுகுவதற்கு 100,000 கி.மீ மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 2,436 மில்லியன் செலவிடப்பட்டது.

அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக்கான செலவு ரூபா 1,430 மில்லியன் என்பதுடன் அதில் கணிசமான அளவு துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை மேம்பாட்டுக்காக செலவிடப்பட்டுள்ளது. வீதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் அபிவிருத்திசெய்வதற்கான செலவு ரூபா 113 மில்லியன் என்பதுடன் பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணத்திற்கான செலவு ரூபா 606 மில்லியனாகும்.

துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை, ஐ-றோட் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள் மற்றும் பாலங்களை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் கொஹுவல மற்றும் கெடம்பேயில் மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் ஆகியவை 2022 இன் முதல் நான்கு மாதங்களில் இலக்கு முன்னேற்றத்தை அடைந்துள்ளன. மேலும், சுமார் ரூபா 14,380 மில்லியன் வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ளூர் வங்கிகளிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெற்ற கடனுக்கான வட்டி மற்றும் மூலதனத் திருப்பிச் செலுத்துதலாக செலுத்தப்பட்டுள்ளது.

## போக்குவரத்து துறை

போக்குவரத்து துறைக்கான அரசாங்கத்தின் மொத்த செலவினம் 9.3 சதவீதமாகக் குறைந்து 2021 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ரூபா 12,320 மில்லியனாகக் காணப்பட்டது. ரூபா 9,190 மில்லியன் மற்றும் ரூபா 3,130 மில்லியன் முறையே மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. கொழும்பு புறநகர் புகையிரதக் கருத்திட்டம், மகோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரதப் பாதை மறுசீரமைப்புக் கருத்திட்டம் மற்றும் சமிக்சைகளை நிறுவுதல் மற்றும், ரயில்வே பெட்டிகளின் பெரிய மற்றும் சிறியளவிலான திருத்தங்களை மேற்கொள்வதற்கு ரூபா 2,731 மில்லியன் புகையிரதத் திணைக்களத்தினால் செலவிடப்பட்டுள்ளது.

2022 இன் முதல் நான்கு மாதங்களின் போது, போக்குவரத்து துறையின் மொத்த செலவினங்களில் இலங்கை மத்திய போக்குவரத்து சபையினால் படைவீரர்களுக்கான பேரூந்து அனுமதிப்பத்திரம், வருமானமீட்டாத பாதைகள், பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான பருவச் சீட்டுக்கள் என்பவற்றுக்காக ரூபா 2,850 மில்லியன் செலவிடப்பட்டது. இக்காலப்பகுதியின் போது மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் ரூபா 224 மில்லியன் செலவிடப்பட்டது.

## வீடமைப்பு அபிவிருத்தி

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், ரூபா 1,351 மில்லியன் வீடமைப்பு மற்றும் அது சார்ந்த உட்கட்டமைப்பு கட்டுமானத்திற்காக செலவழிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு இதே காலக்கட்டத்தில் 44.4 சதவீதம் குறைவான செலவினம். கிராமப்புறம், நகர்ப்புறம், தோட்டங்கள், விருசுமித்துரு மற்றும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்காக ரூபா 603 மில்லியன் செலவிடப்பட்டது.

## நகர அபிவிருத்தி

நகர அபிவிருத்திக்கான மொத்தச் செலவு 2022 இன் முதல் நான்கு மாதங்களில் 11.1 சதவீதம் அதிகரித்து ரூபா 5,408 மில்லியனாக இருந்தது. இது 2021 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 4,868 மில்லியனாக இருந்தது. இதில் ரூபா 393 மில்லியன் மீண்டெழும் செலவு மற்றும் ரூபா 5,015 மில்லியன் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது. நகர அபிவிருத்தித் துறையின் மொத்தச் செலவினத்தில், கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம், நகர மறுசீரமைப்புத் திட்டம், கண்டி மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றிற்காக ரூபா 4,680 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. காலி மற்றும் யாழ்ப்பாணம், வெராஸ் கங்கா திட்டம், "சியாக் நகர" திட்டம் மற்றும் மாகாண நகர அபிவிருத்தித் திட்டம்.

**அட்டவணை 2.16** பாதைகள் மற்றும் பாலங்கள் மீதான செலவினம் சனவரி - ஏப்ரல் 2022

ரூபா.மில்லியன்

| | கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டம் | 2021 சன - ஏப் | 2022 சன - ஏப் (தற்காலிகமானது) |
|---|---|---|---|
| 1 | **அதிவேக பாதை அபிவிருத்தி** | **520** | **1,430** |
| | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் | 444 | 238 |
| | கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்ல அதிவேகப் பாதை | 23 | 117 |
| | புதிய களனி பாலத்திலிருந்து உயர்த்தப்பட்ட அத்துருகிரியவிற்கான அதிவேகப் பாதை | 31 | 54 |
| | துறைமுக அடைவு உயர்த்தப்பட்ட அதிவேகப்பாதை கருத்திட்டம் | 22 | 1,021 |
| 2 | **நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி** | **22,527** | **16,123** |
| | பாதைகள் பராமரிப்பு | 1,503 | 688 |
| | கொழும்பு மாவட்ட பாதை அபிவிருத்தி கருத்திட்டம் | 664 | 158 |
| | தெற்கு பாதை இணைப்புக் கருத்திட்டம் | 267 | 438 |
| | ஒருங்கிணைந்த பாதை முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (ஐ பாதை) | 12,055 | 10,613 |
| | மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வீதிகள், பாலங்களை விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் | 30 | 1,200 |
| | பிரதான பாதைகள் , அதிவேகப் பாதைகள் அடைவுக்கான மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான மாற்றுச்சாலைத் தொடர்பு அபிவிருத்தி | 7,371 | 2,436 |
| | ஏனையவை | 637 | 590 |
| 3 | **பாதைகள் விரிவாக்கல் மற்றும் மேம்பாடு** | **1,437** | **113** |
| 4 | **பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம்** | **118** | **606** |
| | தேசிய அதிவேகப் பாதைகளில் சேதமடைந்த பலவீனமான பாலங்களின் மீள்கட்டமைப்பு | 52 | 32 |
| | பழைய பாலங்களின் தொகுதிகளைக் கொண்டு கிராமிய பாலங்கள் நிர்மாணம் | 16 | 303 |
| | இரண்டாவது புதிய களனி பால நிர்மாணக் கருத்திட்டம் | 32 | 21 |
| | கொஹுவல மற்றும் காதம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் | - | 226 |
| | ஏனையவை (3 மேம்பாலங்கள் உள்ளடங்களாக) | 18 | 24 |
| 5 | **இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீதி புனரமைப்பு** | **38** | **12** |
| 6 | **மகநெகும கிராமிய பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | **16** | **1,134** |
| 7 | **வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான மாற்றல்கள்** | **2,590** | **2,550** |
| 8 | **காணி மற்றும் காணி மேம்பாடு (முன்னுரிமை கருத்திட்டங்கள் நீங்களாக ஏனைய கருத்திட்டங்கள்** | **391** | **50** |
| 9 | **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அர்ப்பணிப்புகளுக்கு இடைவெளி நிதியளிப்பு** | **11,339** | **14,380** |
| 10 | **ஏனைய** | **-** | **-** |
| | **மொத்தம்** | **38,796** | **36,398** |

மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

### பொது திறைசேரி காசுப்பாய்ச்சலின் செயலாற்றுகை

2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், வருமானம் மற்றும் பிற வரவுகள் மூலம் பொது திறைசேரிக்கு கிடைக்கப்பெற்ற பண வரவுகள், மதிப்பீட்டுத் தொகை ரூபா 613.7 பில்லியனுக்கு மாறாக ரூபா 598.5 பில்லியன்கள் ஆகும். இது மதிப்பீட்டின் 97.5 சதவீதத்தை எட்டியுள்ளது. இதேவேளை, 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் பொது முதலீட்டுக்கான மற்றும் மீண்டெழும் செலவுக்கான காசு வெளிப்பாச்சல், மதிப்பீட்டுத் தொகை ரூபா 1,210.2 பில்லியன்களுக்கு மாறாக, ரூபா 1,249.3 பில்லியன்களாக காணப்பட்டதுடன், மதிப்பீட்டின் 103.2 சதவீதத்தை எட்டியது. இது 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் ரூபா 1,022.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 22.2 சதவீதம் அதிகமாகும்.

ஏப்ரல் 30, 2022 இல் மொத்த பணப் பற்றாக்குறை ரூபா 650.8 பில்லியன ஆகும், முக்கியமாக செயல்பாட்டுச் செலவுகள் மற்றும் பொது முதலீட்டுச் செலவுகள் முறையே 14.8 சதவீதம் மற்றும் 64.5 சதவீதம் அதிகரித்ததன் காரணமாக, 2021 ஏப்ரல் இறுதியின் ரூபா 563.6 பில்லியன் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 15.5 சதவீதம் அதிகரித்துள்ளது, எவ்வாறாயினும், 2021 ஏப்ரல் 30 இல் நடைமுறையில் உள்ளவாறு, இறுதி எதிர்மறை காசு மற்றும் வங்கி இருப்பு ரூபா 620.5 பில்லியனுக்கு எதிராக ரூபா 230.3 பில்லியனாகப் பதிவானது.

### அரச கடன் முகாமைத்துவம்

2022 ஆம் ஆண்டிற்கு பராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன் எல்லை ரூபா 3,200 பில்லியன், இதற்கிடையில் 2021 ஜனவரி 01 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலக்கட்டத்தில் அரச கடன்களின் பயன்பாடு ரூபா 1,754.1 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் நடவடிக்கைகளுக்கும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கும் நிதியளிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்திட்டம்/நிகழ்ச்சித்திட்டக் கடன்களை உள்ளடக்கி முறையே ரூபா 1,600.7 பில்லியன் மற்றும் ரூபா 153.4 பில்லியனினை மொத்தக் கடன் பயன்பாடு கொண்டிருந்தது. 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ஏறக்குறைய 91.3 சதவீதம் உள்நாட்டுக் கடனாகும். திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் தற்காலிக முற்பணம் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆகியவை அரசாங்க உள்நாட்டுக் கடன்களின் முக்கிய மூலாதாரங்களாகக் காணப்பட்டன. அதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மொத்த உள்நாட்டு கடன் பெறுகைகளில் 60 சதவீதம் திறைசேரி முறிகளையும், 31 சதவீதம் திறைசேரி உண்டியல்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய அதேவேளை, 8 சதவீதம் இலங்கை மத்திய வங்கி தற்காலிக முற்பணம் மூலமாகவும் மற்றும் இலங்கை அபிவிருத்தி பிணைகள் மூலமும் அதிகரிக்கப்பட்டது. மீளாய்வுக்குரிய காலப்பகுதியின் முடிவில் தேறிய கடன் ரூபா 1,148.5 பில்லியன் ஆகும்.

**அட்டவணை 2.18 : மொத்த உள்நாட்டுக்கடன் பெறுகைகள் (சனவரி முதல் ஏப்பிரல் 2022 வரை)**

| | ரூபா.பில்லியன் |
|---|---|
| திறைசேரி பிணைகள் | 1,003.5 |
| திறைசேரி உண்டியல்கள் (நிகர) | 518.2 |
| தற்காலிக முற்பணங்கள் - இலங்கை மத்திய வங்கி | 73.8 |
| இலங்கை அபிவிருத்தி பத்திரங்கள் | 65.6 |
| வெளிநாட்டு நாணய வங்கி அலகு மீள்கொடுப்பனவுகள் | (60.4) |
| **மொத்தம்** | **1,600.7** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

**அட்டவணை 2.17 : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரை அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகளின் கூற்று**


**அரச திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகன்** ரூபா.பில்லியன்

| விடயம் | சன - ஏப் | | |
|---|---|---|---|
| | 2021 | 2022 | |
| | உண்மையான | மதிப்பிடப்பட்ட | உண்மையான |
| ஆரம்ப காசு மீதி | -488.2 | -831.6 | -831.6 |
| வருமானம் மற்றும் ஏனைய பெறுகைகளிலிருந்து மொத்த காசு உட்டபாய்ச்சல் | 459.1 | 613.7 | 598.5 |
| மீண்டெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | -870.4 | -986.9 | -998.8 |
| மூலதன கொடுப்பனவுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் * | -152.3 | -223.3 | -250.5 |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | -563.6 | -596.5 | -650.8 |
| மொத்த பெறுகை * | 732.5 | 1,786.9 | 1,754.1 |
| படுகடன் மீள் கொடுப்பனவு | -310.7 | -520.8 | -605.6 |
| தேறிய பெறுகை | 421.8 | 1,266.1 | 1,148.5 |
| முன்னைய ஆண்டின் சர்வதேச முறிகளின் தேறிய பெறுகைகள் | - | - | 4.5 |
| சீராக்கல் கணக்கு மீதி (தற்காலிக ஊழிய மீதி, தேறிய வைப்புக்கள் முதலியன) | 9.5 | - | 99.1 |
| முடிவுறுத்தல் காசு மீதி | -620.5 | -161.9 | -230.3 |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

*30 ஏப்ரல் 2022 இல் உள்ளவாறு, திறைசேரி செயல்பாட்டுத் துறையால் கணக்கிடப்பட்ட திட்டம்.்.நிகழ்ச்சித்திடடக் கடன்கள் உள்ளடங்கும

வரைவு 2.3 மொத்த உள்நாட்டு கடன்கள் (ஜனவரி - ஏப்ரல் 2022)




மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

## திறைசேரி உத்தரவாதங்கள் மீதான தற்செயலான பொறுப்புகளை வெளிப்படுத்துதல்

2016 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்பு) (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 2 இன் அடிப்படையில் திறைசேரி உத்தரவாதங்கள் வழங்கப்படுகின்றன மற்றும் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் பெறுமதி மற்றும் 30 ஏப்ரல் 2022 இல் செல்லுபடியாகும் மிகுதி ரூபா 2,768.2 பில்லியன் ஆகும். 30 ஏப்ரல் 2022 இன் படி பொது திறைசேரியால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்களின் விபரம் அட்டவணையில் 2.19 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.19 : திறைசேரியினால் விநியோகிக்கபட்ட உத்தரவாதங்களின் விபர பட்டியல் 29.04.2022 வரை

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா.மில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மக்கள் வங்கி | பி சி சி லங்கா லிமிடெட் | 300.00 | |
| | | இலங்கை மின்சார சபை | 27,178.07 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 596,778.84 | |
| | | வரை. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் | 25,887.67 | |
| | | லங்கா கோல் கம்பனி லிமிடெட் | 28,000.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 7,475.25 | |
| | | தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் | 140.00 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 1,097.83 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 58,184.52 | |
| | | அரச அச்சு கூட்டுத்தாபனம் | 1,350.00 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 16,789.57 | |
| | | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் | 100.00 | |
| | | எஸ் ரி சி ஜெனரல் டிரேடிங் கம்பெனி லிமிடெட | 6,485.09 | |
| | | லங்கா சதோச லிமிடெட் | 2,241.00 | 772,007.84 |
| 2 | இலங்கை வங்கி | வரை. கட்டிட பொருள் கூட்டுத்தாபனம் | 500.00 | |
| | | இலங்கை மின்சார சபை | 5,000.00 | |
| | | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் | 250.00 | |
| | | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 593,997.86 | |
| | | வரை. எல்கடுவ ப்லான்டேஷன் | 30.00 | |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்-கழகம் | 835.00 | |
| | | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை | 340.00 | |
| | | லங்கா நிலக்கரி நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் | 22,000.00 | |
| | | லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் | 6,000.00 | |
| | | வரை. வியாபார முகாரமத்துவத் தேசிய பாடசாலை | 8,600.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 71,848.44 | |
| | | நோர்த் சீ லிமிடெட் | 38.63 | |
| | | நெல் சந்தைப்படுத்தல் சபை | 500.00 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 148,393.41 | |
| | | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 13,049.95 | |
| | | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம் | 1,000.00 | |
| | | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | 200.00 | |
| | | அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,400.00 | |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 2,189.88 | 877,173.18 |

| தொ. இல | வங்கி/ நிறுவனத்தின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | ரூபா. மில்லியன | மொத்தம் |
|---|---|---|---|---|
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | இலங்கை மின்சார சபை | 7,500.00 | |
| | | ஜெ. சே. ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் | 42,747.79 | |
| | | லக்தனவி லிமிடெட் | 2,992.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 32,710.61 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 122,615.66 | |
| | | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் | 3,500.00 | |
| | | நகர அபிவிருத்தி அதிகார சபை | 2,770.00 | |
| | | டெக்னோ பார்க் அபிவிருத்தி கம்பெனி பிரைவேட் லிமிடெட் | 1,500.00 | 216,336.06 |
| 4 | வர்த்தக வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 968.36 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 4,755.93 | 5,724.29 |
| 5 | டீ எப் சீ சீ வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 6,026.24 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 5,896.51 | 11,922.75 |
| 6 | சீனா எக்சிம் வங்கி | இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 31,915.68 | 31,915.68 |
| 7 | ஹட்டன் நெஷனல் வங்கி | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 4,000.00 | |
| | | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 16,458.52 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 20,133.15 | 40,591.67 |
| 8 | ஹொங்கொங் என்ட் ஷங்காய் பேங்கின் கொ லிமிடெட் | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 15,889.61 | 67,372.51 |
| | | வெஸட் கோஸ்ட் பிரைவேட் லிமிடெட் | 51,482.90 | |
| 9 | இன்டஸ்ரியல் என்ட் கொமர்ஷியல் பெங் ஒப் சைனா | இலங்கை மின்சார சபை | 15,110.01 | 15,110.01 |
| 10 | யப்பான் இன்டநெஷனல் கோபரேஷன் ஏஜன்சி (JICA) | விமான நியை, விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் | 206,600.47 | 206,600.47 |
| 11 | தேசிய அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 21,380.43 | |
| | | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 6,299.21 | 27,679.63 |
| 12 | எக்சிம் பேங்க் ஒப் இந்தியா | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 92,411.67 | 92,411.67 |
| 13 | சீனா அபிவிருத்தி வங்கி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 22,487.93 | 22,487.93 |
| 14 | ஆசிய அபிவிருத்தி வங்கி | இலங்கை மின்சார சபை | 167,399.40 | 167,399.40 |
| 15 | சம்பத் வங்கி பிஎல்சி | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 14,500.00 | 14,500.00 |
| 16 | யுனி கிரடிட் பேங் ஒஸ்ரியா ஏஜி | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 19,319.90 | 19,319.90 |
| 17 | ஐஎன்ஜி வங்கி எனவீ நெ-தர்லாந்து | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை | 31,672.39 | 31,672.39 |
| 18 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 4,319.98 | 4,319.98 |
| 19 | சீனா நெஷனல் கெமிகல் இன்ஜினியரிங் இல14. கன்ஸ்ட்ரக்ஷன் கொ.லிமி. | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 15,758.94 | 15,758.94 |
| 20 | டீபி டரஸ்டீஸ் ஹொங்கொங் லிமிடெட் | சிறி லங்கன்ஸ் எயார்லைன்ஸ் லிமிடெட் | 62,999.77 | 62,999.77 |
| 21 | இலங்கை சேமிப்பு வங்கி லிமிடெட் | நோர்த் சீ லிமிடெட் | 60.00 | 60.00 |
| 22 | ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) | லங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி | 64,799.77 | 64,799.77 |
| | | **மொத்தம்** | **2,768,163.84** | **2,768,163.84** |

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

# அத்தியாயம் 3

# அரசுடைமை நிறுவனங்களின் செயலாற்றுகை

## மேன்நோக்கு

2022 இன் முதல் நான்கு மாதங்களுள், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் செயற்பாட்டு ரீதியாகவும், நிதி ரீதியாகவும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டன. திரவத்தன்மையான அந்நியச் செலாவணி கிடைக்கப்பெறாமையானது, அவற்றுள் பலவற்றின், முக்கியமாக சக்திவள மற்றும் போக்குவரத்துத் துறையிலுள்ளவற்றின் வழங்கல் சங்கிலியின் முகாமைத்துவத்தை மோசமாகப் பாதித்தது. இவ்வாறான எதிர்மறையான தாக்கமானது மொத்தப் பொருளாதாரத்திலும் காணப்பட்டது.

சக்திவளத் துறையில் செலவுப் பிரதிபலிப்பு விலையிடல் முறை பின்பற்றத்தொடங்கியமை காரணமாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் செயற்பாட்டு நிலைமையை நோக்கிய நேரான அடியெடுப்பொன்று காணப்பட்ட போதிலும், தீர்க்கப்பட வேண்டிய பல்வேறு சிக்கல்கள் அங்கு இன்னும் உள்ளன. முக்கியமாக வெளிநாட்டு நாணய வடிவிலுள்ள ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்துவரும் கடனே இருப்பதுடன், அது அந்நியச் செலாவணி இழப்பை அந்நிறுவனத்திற்கு ஏற்படுத்தி, அரசாங்கத்திற்கும் மேலதிக அரசிறை அழுத்தத்தை ஏற்படுத்தியது மட்டுமல்லாது, அரச வங்கிகளுக்கும் நிதி ரீதியான அழுத்தத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, 2022 ஏப்ரல் மாத இறுதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா 986 பில்லியன்கள் என்ற எதிர்மறையான உரிமைப் பங்குகளை மாத்திரமே கொண்டிருந்தது. இலங்கை மின்சார சபையும் கடந்த 8 வருடங்களாகத் தனது மின்சாரக் கட்டணங்களைச் சீரமைக்காததால், ரூபா 236 பில்லியன்கள் என்ற திரட்டிய நட்டத்தைக் கொண்டுள்ளது. உலகச் சந்தையில் எரிபொருளினதும் நிலக்கரியினதும் அதிகரிக்கும் விலை, நாணய மதிப்பிறக்கத்துடன் சேர்ந்து அந்நிறுவனத்தின் செயற்பாட்டுச் செலவுகளுக்குப் பெரியதொரு தடையாக அமைந்ததுடன், அத்துறையில் கட்டணங்களின் அவசரமான மறுசீரமைப்பைக் கோரி நிற்கின்றது. நாடு முழுவதற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கான நிலைத்த சக்திவள விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக, சக்திவளத்துடன் தொடர்புடைய இவ்விரு முக்கிய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்களது நிதி நிலைமைகளைச் சீரமைப்பது முக்கியமானதாக இருக்கிறது.

குறிப்பிடத்தக்க அரசிறைச் சிக்கல்களைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் என்பது இன்னொரு அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனமாக உள்ளது. அதன் 2021/22 இற்கான நட்டங்கள் ரூபா 171 பில்லியன்களை எட்டியதுடன், அதற்குரிய கவலைகளை ஏற்படுத்துவதாகவும் காணப்பட்டது. அரசிறை நட்டங்களுக்கு மேலதிகமாக, சவாலுக்குரிய அதன் செயற்பாடுகளுக்கு மத்தியில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அதன் வெளியகப் பொறுப்புகளும் இருந்தன. அதேவேளை, உல்லாசப் பிரயாணத்துறையின் வீழ்ச்சி, எரிபொருட்களின் விலையுயர்வு ஆகியன காரணமான அதன் வருமான வீழ்ச்சியும் காணப்பட்டது.

2022 இன் முதல் நான்கு மாதங்களுள், முக்கியமான 52 அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க இழப்பான ரூபா 859 பில்லியன்களை ஏற்படுத்தியதுடன், 2021 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 13 பில்லியன்கள் இழப்புடன் ஒப்பிடும்போது இது மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகிறது. இந்த இழப்புகளுக்கான முக்கிய காரணியாக நாணய மதிப்பிறக்கம் காரணமான, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அந்நியச் செலாவணி இழப்பு உள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அந்நியச் செலாவணி இழப்பு 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 549 பில்லியன்களாக இருந்தது.

பொதுத் திறைசேரி 2022 இன் முதல் நான்கு மாதங்களில் அறவீடுகளாகவும் பங்கிலாபங்களாகவும் ரூபா 11.4 பில்லியன்களைச் சேகரித்ததுடன், 2021 இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது இது 67 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

## அரசுக்குச் சொந்தமான பிரதான பத்து தொழில்முயற்சி நிறுவனங்கள் பற்றிய மதிப்பாய்வு

### இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்துக்கள் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 3,803 பில்லியன்களிலிருந்து, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 4,366 பில்லியன்களாக 14.8 சதவீதத்தால் அதிகரித்தன. 2022 இன் முதல் நான்கு மாதங்களில் வங்கியின் வைப்புகள் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 2,867 பில்லியன்களிலிருந்து, ரூபா 3,256 பில்லியன்களாக 13.5 சதவீதத்தால் அதிகரித்தன. வங்கியின் மொத்த செயற்படாக்கடன் விகிதம் 2021 இன் இறுதியில் இருந்த 4.4 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, 2022 ஏப்ரல் இறுதியில் 5.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இலங்கை வங்கியின் வரிக்கு முந்திய இலாபம், 2021 இன் அதே காலப்பகுதியில் இருந்த ரூபா 19.6 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 19.9 பில்லியன்களாக இருந்தது.

## மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்துக்கள் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 2,648 பில்லியன்களிலிருந்து, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 3,136 பில்லியன்களாக 18.4 சதவீதத்தால் அதிகரித்தன. 2022 இன் முதல் நான்கு மாதங்களில் வங்கியின் வைப்புகள் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 2,072 பில்லியன்களிலிருந்து, ரூபா 2,268 பில்லியன்களாக அதிகரித்தன. கடன்களும் முற்பணங்களும் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 1,937 பில்லியன்களிலிருந்து, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 2,014 பில்லியன்களாக 3.9 சதவீதத்தால் அதிகரித்தன. வங்கியின் மொத்த செயற்படாக்கடன் விகிதம் 2021 இன் இறுதியில் இருந்த 3.2 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, 2022 ஏப்ரல் இறுதியில் 4.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மக்கள் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம், 2021 இன் அதே காலப்பகுதியில் இருந்த ரூபா 8.0 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 9.6 பில்லியன்களாக இருந்தது.

## தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்துக்கள் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 1,579 பில்லியன்களிலிருந்து, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 1,623 பில்லியன்களாக 2.7 சதவீதத்தால் அதிகரித்தன. வங்கியின் வைப்புகள் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 1,428 பில்லியன்களிலிருந்து, 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 1,462 பில்லியன்களாக 2.3 சதவீதத்தால் அதிகரித்தன. கடன்களும் முற்பணங்களும் 2021 இன் இறுதியில் இருந்த ரூபா 539 பில்லியன்களிலிருந்து, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 563 பில்லியன்களாக 4.4 சதவீதத்தால் அதிகரித்தன. தேசிய சேமிப்பு வங்கியின் வரிக்கு முந்திய இலாபம், 2021 இன் அதே காலப்பகுதியில் இருந்த ரூபா 10.5 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 8.5 பில்லியன்களாக இருந்தது.

## வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முந்திய இலாபம், 2022 முதல் நான்கு மாதங்களில், 2021 இன் அதே காலப்பகுதியில் இருந்ததுடன் ஒப்பிடும்போது, 21 சதவீதத்தால் அதிகரித்து, ரூபா 9,017 மில்லியன்களாக இருந்தது. அதன் மொத்த வருமானம் 2022 முதல் நான்கு மாதங்களில், 2021 இன் அதே காலப்பகுதியில் இருந்த ரூபா 19 பில்லியன்களுடன் ஒப்பிடும்போது, ரூபா 22 பில்லியன்களுக்கு 15 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்குரிய பிரதான காரணம் கம்பனியின் வெளிநாட்டு நாணயத்திலான முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட இலாபத்தின் அதிகரிப்பாகும். சமீபத்தில், ∴பிச் ரேட்டிங் சேவையானது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தேசிய காப்புறுதி நிதிப்பலத்தில் AAA (lka) தரத்திலிருந்து AA (lka) தரமாகக் குறைத்தது.

## இலங்கை மின்சார சபை

மின் விநியோகத் தடைக்கு மத்தியில், மின்சாரத்திற்குரிய கேள்வி கடுமையாக இருந்ததுடன், மின்சார விற்பனையிலிருந்தான வருமானம், 2022 இன் முதல் நான்கு மாதத்தில், 2021 இன் அதே காலப்பகுதியிலிருந்த ரூபா 80,529 மில்லியன்களிலிருந்து, 2.5 சதவீதத்தால் ரூபா 82,580 மில்லியன்களாக அதிகரித்தது. உலகச் சந்தையில் எரிபொருளினதும் நிலக்கரியினதும் அதிகரிக்கும் விலை, நாணய மதிப்பிறக்கத்துடன் சேர்ந்து, இலங்கை மின்சார சபையின் நேரடி உற்பத்திச் செலவை, இந்தக் காலகட்டத்தில், ரூபா 59,849 மில்லியன்களிலிருந்து 68 சதவீதத்தால் ரூபா 100,615 மில்லியன்களாக அதிகரித்தது. திரவத்தன்மையான வெளிநாட்டு நாணய மட்டுப்பாடுகளும் அதன் காரணமான, கனரக எரிபொருளும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைத் தடங்கல்களும் உள்ளிட்ட முக்கிய உள்ளீடுகளின் பற்றாக்குறையும் இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகளுக்குத் தடையாக அமைந்தன. இதனால், அறிக்கைக்குரிய காலப்பகுதியில் ஏற்பட்ட மின்தடைகள் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் குறிப்பிடத்தக்க சவால்களை உருவாக்கின.

மின்சக்தி உற்பத்திச் செலவில் ஏற்பட்ட குறிப்பிட்ட அதிகரிப்பு காரணமாக, இலங்கை மின்சார சபையின் செயற்பாட்டு இழப்பு 2022 முதல் நான்கு மாதங்களில், 2021 இன் அதே காலப்பகுதியிலிருந்த ரூபா 7,515 மில்லியன்கள் இழப்புடன் ஒப்பிடும்போது, ரூபா 47,190 மில்லியன்களாகக் காணப்பட்டது. விற்பனையில் ஓர் அலகுக்கான செலவும் 2021 இல் காணப்பட்ட கிலோவாற்றொன்றுக்கு ரூபா 18.26 உடன் ஒப்பிடும்போது, 2022 இன் முதல் நான்கு மாதங்களில் கிலோவாற்றொன்றுக்கு ரூபா 26.96 ஆக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது. இவ்வாறான குறித்த காலப்பகுதியில் கலப்பு உற்பத்திகள் தொடர்பாகப் பார்க்கும்போது, 2022 இல் நீர்மின்னுற்பத்தி (20%), அனல் மின்னுற்பத்தி (எரிபொருள்) (28%), அனல் மின்னுற்பத்தி (நிலக்கரி) (41%), மரபுசாராத/ காற்றாலை மின்னுற்பத்தி (11%) ஆக, 2021 இன் அதே காலப்பகுதியில நீர்மின்னுற்பத்தி (18%), அனல் மின்னுற்பத்தி (எரிபொருள்) (29%), அனல் மின்னுற்பத்தி (நிலக்கரி) (44%), மரபுசாராத /காற்றாலை மின்னுற்பத்தி (9%) ஆக இருந்ததுடன் ஒப்பிடும்போது காணப்பட்டன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் சுயாதீன மின்னுற்பத்தியாளர்களுக்கும் உள்ள இலங்கை மின்சார சபையின் நிலுவையான கடப்பாடுகள், இலங்கை மின்சார சபைக்கு அரசாங்கம் வழங்கிய ரூபா 45,000 மில்லியன்கள் மானியம் காரணமாக, 2022 இன் ஏப்ரல் இறுதியில் ரூபா 121,811 மில்லியன்களுக்குக் குறைவடைந்தது. இலங்கை மின்சார சபையின் நிலுவை காரணமாக, சுயாதீன மின்னுற்பத்தியாளர்களும், குறிப்பாக மீள்புதுப்பித்தல் சக்தித் துறை, நிதி ரீதியான கடும் சிரமங்களுக்கு முகங் கொடுத்தார்கள். மேலும், அரச வங்கிகளுக்கான நிலுவைகளும் 2022 இன் ஏப்ரல் இறுதியில் ரூபா 115,964

மில்லியன்களுக்கு அதிகரித்தன. மேலதிகப் பற்று வசதிகளும், கருத்திட்டக் கடன் நிலுவைகளும் உள்ளிட்ட வங்கிகளுக்கான மொத்த நிலுவைகள் 2022 இன் ஏப்ரல் இறுதியில் ரூபா 429,062 மில்லியன்களாக இருந்தன.

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2022 இன் முதல் நான்கு மாதங்களில் பெற்றோலியம் மற்றும் பெற்றோலியம் சார் பொருட்களின் இறக்குமதி 11 மில்லியன் பீப்பாக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டன. இதற்குக் காரணமாக உலக ரீதியாக வழங்கல் சங்கிலியில் காணப்பட்ட கட்டுப்படுத்தும் காரணிகள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடுகள் இருந்தன. பெற்றோலியப் பொருட்களின் விற்பனை, 2022 இன் முதல் நான்கு மாதங்களில் 2021 இன் அதே காலப்பகுதியில் விற்பனையான 1,920 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, 4 சதவீதத்தால் ஓரளவுக்கே அதிகரித்தது.

2022 பெப்ருவரியில், இந்தியாவும் இலங்கையும் இந்தியன் ஒயில் கம்பனியிலிருந்து கடன் திட்டமொன்றினூடான பெற்றோலியப் பொருட்களின் விநியோகத்திற்காக, ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன. பின்னர் ஏப்ரலில் அது ஐ.அ.டொலர் 200 மில்லியன்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இந்தக் கடன் வழிமுறைகள் முக்கிய விநியோகங்களை வழங்கிய அதேவேளை, அந்நியச் செலாவணியில் மட்டுப்பாடுகள் காரணமாகவும் வெளியக நிதியளித்தலில் சவால்கள் காரணமாகவும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெருமளவில் எரிபொருட்களைக் கொள்வனவு செய்வதில் கணிசமான சிரமங்களுக்கு முகங்கொடுத்தது.

பிரித்தானிய வடகடல் (பிரெண்ட்) எண்ணெயின் பீப்பாயொன்றுக்கான சர்வதேச விலை, 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ஐ.அ.டொலர் 105 இற்கு 24 சதவீதத்தால் உயர்வடைந்தது. அதைத் தொடர்ந்து, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த இறக்குமதிச் செலவு 2022 இன் முதல் நான்கு மாத காலத்தினுள், 2021 இன் அதே காலப்பகுதிக்கான ஐ.அ.டொலர் 894 மில்லியன்களுடன் ஒப்பிடும்போது, ஐ.அ.டொலர் 1,254 மில்லியன்களுக்கு 40 சதவீதத்தால் அதிகரித்தது.

அவ்வாறான விலை மாற்றங்களுடன், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2022 இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில், 2021 இன் அதே காலப்பகுதியல் அடைந்த ரூபா 15,715 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில், செயற்பாட்டு நட்டமாக ரூபா 64,951 மில்லியன்களை அடைந்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக, அரசாங்கமானது செலவைப் பிரதிபலிக்கும் விலைப் பொறிமுறையொன்றை பெற்றோலியப் பொருட்களுக்காக அமைத்துடன், அது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால செயற்பாட்டு நிதி நிலைமையை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையானது அதன் ஐந்தொகையிலுள்ள அந்நியச் செலாவணிப் பொறுப்புகள் காரணமாக அபாயகரமான நிலையிலேயே காணப்படலாம். ரூபாவின் நாணய மதிப்பிறக்கம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அந்நியச் செலாவணி இழப்பை மேலும் அதிகரித்து, அதன் அடி மட்டத்தையே பாதிக்கலாம். 2022 இன் முதல் நான்கு மாத காலத்தில் அந்நியச் செலாவணி இழப்பு, 2021 இன் அதே காலப்பகுதியிலிருந்த ரூபா 26,738 மில்லியனுடன் ஒப்பிடும்போது, ரூபா 549,955 மில்லியனாகக் காணப்பட்டது. இது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த நட்டமாக 2022 ஏப்ரல் இறுதியில் ரூபா 628,381 மில்லியன்களை ஏற்படுத்தியது.

30.04.2022 இல் இரு அரச வங்கிகளுக்குச் செலுத்தப்படத்தக்கதாக மொத்தப் பொறுப்புகள் ரூபா 1,223,635 மில்லியன்களை எட்டியது. 2022 ஏப்ரல் இறுதியில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் திரட்டிய நட்டங்களும், தேறிய எதிர்மறைப் பெறுமதியும் முறையே ரூபா 1,047,391 மில்லியன்களாகவும், ரூபா 985,886 மில்லியன்களாகவும் இருந்தன. அதேவேளை, பல்வேறு நிறுவனங்களிலிருந்தான, முக்கியமாக இலங்கை மின்சார சபையிலிருந்தான மற்றும் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்ஸ ிலிருந்தான, வருமதிகள் 2022 ஏப்ரல் இறுதியில், ரூபா 175,927 மில்லியன்களாகக் காணப்பட்டது.

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

கொவிட் - 19, 2021 மார்ச்சில், சரக்குக் கப்பலொன்று தரைதட்டி, சுயஸ் கால்வாயை அடைத்தமை, ரஷ்ய-உக்ரேன் யுத்தம் காரணமாக சமீபத்தில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கம் ஆகியவற்றுடன், முறைமையில் காணப்படும் அழுத்தம் ஆகியன முக்கிய பொருட்களின் விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இவ்வகையான சவால்கள் இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் நடவடிக்கைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை தனது மூன்று துறைமுகங்களான கொழும்பு, காலி, திருகோணமலை ஆகியவற்றிலிருந்து மொத்த வருமானமாக ரூபா 21,908 மில்லியன்களை ஈட்டியதுடன், அதில் 97 சதவீதத்தைக் கொழும்புத் துறைமுகத்திலிருந்து பெற்றுக்கொண்டது. இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் வருமானமானது, 55 சதவீதம் துறைமுக முனையங்களிலிருந்து கிடைப்பதாகவும், 28 சதவீதம் நிலத்தின் உரிமையாளர் என்ற வகையில் கிடைப்பதாகவும், 10 சதவீதம் முதலீட்டு இலாபமாகக் கிடைப்பதாகவும் காணப்படுகிறது. தனிப்பட்ட ஊதியங்களும் மேலதிக நேரக் கொடுப்பனவும் மொத்தச் செலவினமாகிய ரூபா 10,828 மில்லியன்களில் 67

சதவீதத்தை எடுத்துக்கொள்கின்றன. 2022 இன் முதல் காலாண்டிற்கு இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை ரூபா 14,221 மில்லியன்களை இலாபமாக அந்நியச் செலாவணிக்கு மேலதிகமாக இலாபமாக உழைத்தது.

இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையானது ஆசியப் பிராந்தியத்திற்கான ஒரு கடல் மையமாக வருவதற்குத் தொடர்ந்து முயற்சிக்கிறது. பகுதியளவில் தன்னியக்கத்தில் செயற்படத்தக்கதான, கொள்கலன்களுக்கான கிழக்கு முனையத்தின் தாபிப்பு மூலம் வினைத்திறன் அதிகரிக்கப்படும் என்பதுடன், கொழும்பு மேற்கு சர்வதேச முனையக் கூட்டமைப்பு அதிநவீனமானதாக அமைக்கப்படும். தீவிரமான சாத்தியவள ஆய்வுகளையும், ஆலோசனைகளையும் கொண்ட கொள்கலன்களுக்கான மேற்கு முனையம் கட்டப்படுவதையும் துறைமுகத்தின் வடக்குப் பகுதி விரிவாக்கத்தையும் தொடர்ந்து இதன் இரண்டாவது கட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும். இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபையின் இன்னொரு கவனமானது, இலங்கையில் வர்த்தகம் செய்தலை இலகுபடுத்துதலாகும் என்பதுடன், அதற்காக அது அபிவிருத்திக்கான மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தலுக்கான துறைமுகச் சமூக முறைமையில் பங்குகொள்கிறது.

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2025 ஆம் ஆண்டு வரையான இலக்குகளை அடைவதற்காகவும், அரசாங்கத்தின் தூரநோக்கான "எல்லோருக்கும் நீர்" என்பதை நிறைவு செய்வதற்காகவும், குழாய் நீர் வழங்கலையும், சுத்தமான நீர் வழங்கலையும் முறையே 54.9 சதவீதம் மற்றும் 95 சதவீதம் என்ற வகையில் 2022 இன் முதல் நான்கு மாதங்களில் பூர்த்தி செய்துள்ளது. இவை 2021 இன் அதே காலப்பகுதியில் முறையே 53.7 சதவீதமாகவும், 93.8 சதவீதமாகவும் இருந்தன.

இந்தக் காலகட்டத்திற்குள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 6 உள்நாட்டு வங்கிகளால் நிதியளிக்கப்பட்ட 3 பாரிய அளவிலான கருத்திட்டங்களையும், எல்லோருக்கும் நீர் என்பதற்கான 91 கருத்திட்டங்களையும் பூர்த்தி செய்து, 197,207 புதிய இணைப்புகளை வழங்கியுள்ளது. இதன்மூலம் 2022 இன் முதல் நான்கு மாதங்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வருமானத்தில் ரூபா 9,270 மில்லியனை 11.3 சதவீத அதிகரிப்பாக அடையப்பெற்றுள்ளது. 2021 இன் அதே காலப்பகுதிக்கான வருமானமாக ரூபா 8,327 மில்லியன்கள் காணப்பட்டன. ஆயினும், நிர்வாகச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, இக்காலப்பகுதியில் ரூபா 663 மில்லியன் செயற்பாட்டு இழப்புகள் ஏற்பட்டதுடன், அது 2021 இன் அதே காலப்பகுதியில் ரூபா 122 மில்லியன் செயற்பாட்டு இலாபமாகக் காணப்பட்டிருந்தது. இதன் பயனாக, ஒட்டு மொத்த நட்டமாக 2022 இன் முதல் நான்கு மாதங்களில் ரூபா 483 மில்லியன்கள் காணப்பட்டதுடன், 2021 இன் அதே காலப்பகுதிக்கு இந்த நட்டம் ரூபா 205 மில்லியன்களாக இருந்தது. மீளாய்வுக்கான காலப்பகுதியில் நீர் உற்பத்தியும் விற்பனையும் முறையே 4 சதவீதத்தாலும் 5 சதவீதத்தாலும் அதிகரித்து, முறையே 275 கன மீற்றர்களாகவும், 210 கன மீற்றர்களாகவும் காணப்பட்டன. மேலும், வருமானமற்ற நீர் வழங்கல் கடந்த வருடத்தில் சற்று எதிர்மறையான போக்கைக் காட்டியதுடன், கடந்த வருடத்தில் காணப்பட்ட 24.63 சதவீதத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடத்தில் 24.01 சதவீதமாக இருந்தது.

## வரையறுக்கப்பட்ட, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம்

உள்ளக மற்றும் உலக ரீதியான பல்வேறு சவால்களுக்கு மத்தியில், 2022 இன் முதல் நான்கு மாதங்களில் வரையறுக்கப்பட்ட, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமானது 900,000 உள்வரும் பயணிகளைக் கையாண்டுள்ளது. இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் மற்றும் வர்த்தகப் பயணிகள் ஆகியோரது எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலைமையைக் கருத்திற்கொண்டு, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய விரிவாக்கலில் முதலிடுதலானது தொடர்கிறது. அதன் கட்டம் II பூர்த்தி செய்யப்பட்டதும், வருடாந்தம் பயணிகளைக் கையாளும் அதன் திறனானது, தற்போதுள்ள 6 மில்லியன்களிலிருந்து 15 மில்லியன்களாக அதிகரிக்கும். இரண்டாவது கட்ட விரிவாக்கம் 'ஜய்கா' (JICA) நிதி ரூபா 6.1 பில்லியன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த விரிவாக்கத்தின் மூலம் வாகனத் தரிப்பிடங்கள் 49 ஆக அதிகரிக்கப்பட்டு, உள்வருவதற்கான கருமபீடங்கள் 149 ஆகவும் அதிகரிக்கும். குடிவரவுக் கருமபீடங்கள் தற்போது காணப்படும் 27 இலிருந்து 83 ஆக அதிகரிக்கும். அவ்வாறே விமானத்தில் ஏறும் பீடங்களும் 4 இலிருந்து 10 ஆக அதிகரிக்கும். விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமானது, பாதீட்டில் எதிர்வுகூறப்பட்டதிலும் பார்க்க 30 சதவீதத்தால் அதிகரித்ததான ரூபா 9,430 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளதுடன், இதில் விமானங்களிலிருந்தான வருமானம் ரூபா 2,102 மில்லியன்களும், விமானங்களிலிருந்து அல்லாத வருமானம் ரூபா 7,273 மில்லியன்களும், ஏனைய வருமானங்கள் ரூபா 55 மில்லியன்களும் உள்ளடங்கும். மொத்தச் செலவினமானது, பாதீட்டில் எதிர்வுகூறப்பட்டதிலும் பார்க்க 12 சதவீதம் குறைவானதாக, ரூபா 5,719 மில்லியன்களாகக் காணப்பட்டது. ஆயினும், அந்நியச் செலாவணி மதிப்பிறக்கம் காரணமான செயற்பாட்டு இழப்பு ரூபா 11,143 மில்லியன்களாக இருந்ததுடன், அது நிறுவனத்தின் செயற்பாட்டில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியது. ரூபா 6,407 மில்லியன் வரி செலுத்தப்படுவதற்கு முந்தியதான செயற்பாட்டு இழப்பு ரூபா 3,711 மில்லியன் வரை அதிகரித்தது.

## ஸ்ரீலங்கன் எயர்லயின்ஸ்

ஸ்ரீலங்கன் எயர்லயின்ஸ் நிறுவனத்திற்கு மொத்தமாக ரூபா 618,677.61 மில்லியன்கள் பொறுப்பாகக் காணப்படுகின்றன. இதில் வட்டியைக் கொண்டுள்ளதான, இறைமை உத்தரவாதத்துடன் கூடிய ஐ.அ.டொலர் 175 மில்லியன் சர்வதேச முறிகள், திறைசேரியால் உத்தரவாதமளிக்கப்பட்ட அரச வங்கிகளிலிருந்தான கடன்கள், விமானக் குத்தகைகள், கடன் கொடுப்போரிடமிருந்தான – குறிப்பாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்தான வர்த்தகக் கடன்கள் ஆகியனவும் உள்ளடங்கும். இந்த நிலைமையில், இந்நிறுவனத்தின் இழப்புகளுக்கு மேலும் நிதியளிப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என்பதுடன், அதன் ஐந்தொகையை மறுசீரமைப்பதற்கும் அதன் செயற்பாட்டுத் தன்மையை இலாபமீட்டும் வகையில் மாற்றியமைப்பதற்கும் அவசரத் தேவைகள் காணப்படுகின்றன.

2022 இன் முதல் நான்கு மாதங்களில் இந்த நிறுவனத்தின் வருமானம் ரூபா 71,825 மில்லியன்களாக இருந்த அதேவேளை, அதன் மொத்தச் செலவு ரூபா 320,266 மில்லியன்களாக இருந்தது. அதன்படி அக்காலத்திற்குரிய இழப்பு ரூபா 248,441 மில்லியன்களாகும். 2022 மார்ச்சில் இந்நிறுவனத்திற்கு ஏற்பட்ட ஒரே தடவையிலான நாணயமாற்று இழப்பு ரூபா 145 பில்லியன்களாகக் காணப்பட்டது.

**அட்டவணை 3.1: பிரதான அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மறுசீரமைப்பு / முக்கிய முயற்சிகள்**

| நிறுவனம் | மறுசீரமைப்பு / முக்கிய முயற்சிகள் |
|---|---|
| அரச வங்கிகள் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி) | ❖ கடன்களின் தரத்தை உயர்த்துதல், கண்காணிப்பையும் சேகரிப்பையும் மேம்படுத்துதல்,<br>❖ அபாய முகாமைத்துவக் கட்டமைப்பைப் பலப்படுத்துதல்.<br>❖ வாடிக்கையாளரது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துதல்.<br>❖ தற்போதைய வாடிக்கையாளருக்கு உதவுவதற்காக புதிய உற்பத்திகளை உருவாக்குதலும், புதிய வாடிக்கையாளரைக் கவருதலும். |
| இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | ❖ சேவை வழங்காத இடங்களில் நிறுவனத்தின் கிளை வலையமைப்பை விரிவுபடுத்துவதில் முதலீடு செய்தல்.<br>❖ குறைந்த செலவு தரும் கிளை முறைமைக்கு மாற்றம் பெறல்.<br>❖ பங்குதாரர்களுக்குப் பல்வேறு பெறுமதிகளை வழங்கும் அதேவேளை, வர்த்தகப் பெயரின் அங்கீகாரத்தைப் பேணுதல்.<br>❖ எமது வர்த்தகத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கும், உற்பத்தித்திறனை மேலும் அதிகரிப்பதற்கும் புதிய எண்ணிம மயமான தீர்வுகளை அடையாளங்கண்டு, விரைவாக அவற்றை நடைமுறைப்படுத்துதல்.<br>❖ பங்கிலாப அடிப்படையிலான ஆயுள் காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்குதல்.<br>❖ கொள்கை ஆவணங்களை இலத்திரனியல் முறையில் பரிமாறுதல்.<br>❖ வாடிக்கையாளருக்கான அறிவித்தல்களை இலத்திரனியல் முறையில் பரிமாறுதல்.<br>❖ வாடிக்கையாளரது செயலிகளது தன்மைகளை மேம்படுத்துதல். |
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | ❖ அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்படும் செலவை அடிப்படையாகக் கொண்ட விலைப் பொறிமுறை.<br>❖ எரிபொருள் இறக்குமதிக்கான அமைச்சரவை அங்கீகாரம். |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | ❖ கொழும்புத் துறைமுகத்திலும் மற்றைய ஆசிய துறைமுகங்களிலும் போட்டிபோடும் தனியார்துறையினரதும் இந்நிறுவனத்தினதும் கட்டணக் கட்டமைப்புகளில் உள்ள வித்தியாசங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் மற்றைய துறைமுகங்களிலுள்ள கட்டணங்களுடன் போட்டியிடும் வகையில் கட்டணங்களை மீள்பரிசீலனை செய்தல்.<br>❖ கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன்களுக்கான கிழக்கு முனையத்தின் இரண்டாவது கட்ட நிர்மாண வேலைகளை நிறுவனம் ஆரம்பித்துள்ளது. தற்போது இரும்புக் கட்டமைப்பின் நிர்மாணம், பாரந்தூக்கிகளைப் பொருத்துதல், தரை மீட்பு வேலைகள் ஆகியன நடைபெறுகின்றன.<br>❖ துறைமுகச் செயற்பாடுகளையும் சேவைகளையும் மேம்படுத்துவதற்காக, ஊழல்களுக்கும் மோசடிகளுக்கும் எதிராக இலகுவான முறைப்பாட்டுப் பொறிமுறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அதன்படி, துறைமுகத்தை உபயோகிக்கும் எவராவது, இலங்கையின் துறைமுகங்களில் இடம்பெறும் மோசடியான செயற்பாட்டிற்கு எதிராக, +94716413332 என்ற தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தி, அதிகாரபூர்வமான முறைப்பாட்டைப் பதிவுசெய்யவோ அல்லது வாட்ஸ்அப் மூலம் அனுப்பவோ முடியும். |
| ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் | ❖ ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸிற்கு அதற்கெனத் தனியான கொன்வனவுக் கைந்நூலொன்றைத் உருவாக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதுடன், பொது நிதிகள் திணைக்களமும் பொது முயற்சியாண்மைகள் திணைக்களமும் அரச கொள்முதல் கொள்கைகளுக்கு மாறுபடாத வகையில், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் எதிர்காலச் செயற்பாடுகளை நிறுத்தி, புதிய கைந்நூலொன்றை அங்கீகரிப்பதற்கான செயன்முறையில் ஈடுபட்டுள்ளன.<br>❖ திறைசேரியின் பாரத்தைக் குறைக்கும் நோக்கில், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் அரசாங்கப் பங்குகளை விலக்கும் தனது எண்ணத்தைப் பிரதமர் அவர்கள் வெளியிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியமும் மற்றைய பல்தரப்பு உதவும் அமைப்புகளும் இவ்வாறான விலகல்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்துகின்றன.<br>❖ கடன் மீள்செலுத்துகைகளை நிறுத்தி வைத்தல் என்ற அரசாங்கக் கொள்கைக்கு அமைவாக, ரூபா 175 மில்லியன் பெறுமதியான இறையாண்மை முறிகளுக்குரிய வட்டியைச் செலுத்துதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் | ❖ பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய கட்டமைப்பு இரண்டாம் கட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.<br>❖ இறையாண்மை உத்தரவாதத்துடன் பெறப்பட்ட, மத்தள விமான நிலையக் கடன், பண்டா. விமான நிலைய ஓடுபாதைக்கான கடன் உள்ளிட்ட கடன்களின் மீள்செலுத்துகை, கடன் மீள்செலுத்துகைகளை நிறுத்தி வைத்தல் என்ற அரசாங்கக் கொள்கைக்கு அமைவாக, நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. |

மூலம்: அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும், அரச முயற்சியாண்மைகள் திணைக்களமும்

## அட்டவணை 3.2: பிரதான 52 அரசுடமைத் தொழில்முயற்சிகளின் இலாபமீட்டும் தன்மை

ரூபா. மில்லியன்

| | தொழில்முயற்சி | 2020(அ) | 2021(அ) | 2022.04.30 வரையில் (அ) |
|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 23,552 | 43,190 | 19,919 |
| 2 | மக்கள் வங்கி | 21,227 | 30,387 | 9,610 |
| 3 | தேசிய சேமிப்பு வங்கி | 15,645 | 28,555 | 8,590 |
| 4 | அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 790 | 845 | 243 |
| 5 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 1,381 | 1,267 | 303 |
| 6 | பிரதேச அபிவிருத்தி வங்கி | 2,061 | 2,651 | 670 |
| 7 | ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை | 32,500 | 33,159 | 2,972 |
| 8 | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 7,972 | 11,725 | 9,017 |
| 9 | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 8,866 | 5,936 | 2,812 |
| 10 | இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | 265 | 310 | 159 |
| 11 | விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை | 1,257 | 1,780 | 181 |
| 12 | இலங்கை மின்சார சபை | -60,486 | -21,450 | -47,190 |
| 13 | இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம் | 2,371 | -82,208 | -628,381 |
| 14 | இலங்கை துறைமுக அதிகாரசபை | 20,328 | 25,601 | 14,221 |
| 15 | தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை | 643 | -2,996 | -483 |
| 16 | விமான நிலையங்கள் விமானப் போக்குவரத்துச் சேவைகள் | -3,733 | -755 | -6,407 |
| 17 | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடட் | -45,230 | -170,751 | -248,441 |
| 18 | இலங்கை போக்குவரத்துச் சபை | -2,105 | -3,143 | -599 |
| 19 | அரசு பொறியியல் கூட்டுத்தபானம் | -1,066 | -1,020 | -215 |
| 20 | மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | 261 | 250 | -41 |
| 21 | அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் | -257 | 43 | 74 |
| 22 | மில்கோ (பிரைவெட்) லிமிடட்ழூழு | 230 | 330 | -131* |
| 23 | தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | - | 158 | 444 |
| 24 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம் | -150 | -232 | 3.7 |
| 25 | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை | -351 | -481 | -22.4 |
| 26 | குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி | 214 | 468 | 204 |
| 27 | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி | 283 | 511 | 139** |
| 28 | கலுபோவிட்டியானை தேயிலைத் தொழிற்சாலைக் கம்பனி | 43 | -15 | 0.57** |
| 29 | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தபானம் | 15 | 16 | 2 |
| 30 | இலங்கை கனிம மணல் கம்பனி | 69 | 1,205 | 310 |
| 31 | இலங்கை பொஸ்பேட் கம்பனி | 150 | 117 | 157** |
| 32 | கஹட்டகஹ கிர.ஃபைட் லங்கா லிமிடட் | 14 | 4 | 7.7** |
| 33 | அபிவிருத்தி லொத்தர் சபை | 2,994 | 2,954 | 1,409 |
| 34 | தேசிய லொத்தர் சபை | 1,435 | 1,003 | 444 |
| 35 | அரச மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | 1,161 | 1,238 | 563 |
| 36 | இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | 9 | -21 | 59 |
| 37 | அரச மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் | 2,546 | 3,157 | 209 |
| 38 | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை | 174 | -258 | -50 |
| 39 | சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு | -251 | -344 | -102 |
| 40 | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம் | -236 | -224 | -125 |
| 41 | இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம் | -2 | 9 | -52 |
| 42 | இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை | -106 | -35 | -17.3 |
| 43 | அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | 464 | 1,236 | 186 |
| 44 | அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி | -120 | 63 | 126 |
| 45 | லங்கா சதொச நிறுவனம் | -1,386 | -880 | -118.7 |
| 46 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம் | -44 | -208 | -57 |
| 47 | இலங்கைப் கடற்தொழில் கூட்டுத்தபானம் | -48 | -63 | -31 |
| 48 | இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம் | -236 | -140 | -9 |
| 49 | லங்கா உரக் கம்பனி | 98 | 124 | 61.3 |
| 50 | கொழும்பு கொமாசல் ஃபெர்டிலைசர் கம்பனி | 163 | 260 | 166.7 |
| 51 | ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ | -877 | -947 | -52 |
| 52 | லங்கா சீனிக் கம்பனி | 1,171 | 1,577 | 391 |
| | **மொத்தம்** | **33,668** | **-86,042** | **-858,870** |

மூலம் : அரசுடமைத் தொழில் முயற்சிகள் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம்
(அ) தற்காலிகமானது
*இலாபம் 2022.02.28 ஆம் திகதியன்று (2022 சனவரி முதல் பெப்ரவரி வரையில்)
** இலாபம் 2022.03.31 ஆம் திகதியன்று (2022 சனவரி முதல் மார்ச் வரையில்)

## அட்டவணை 3.3: அரசுடமைத் தொழில் முயற்சிகளிலிருந்தான அறவீடு/ பங்கிலாபம்

ரூபா. மில்லியன்

| | 2020 | 2021 | 2022.04.30 வரையில் |
|---|---|---|---|
| **அறவீடு** | **14,769** | **25,919** | **9,561** |
| தேசிய சேமிப்பு வங்கி | 1,000 | 3,500 | - |
| இலங்கை வங்கி | 1,250 | 1,500 | - |
| மக்கள் வங்கி | 2,500 | 1,977 | - |
| இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | 5,000 | 8,500 | 5,700 |
| அரசாங்க மரக் கூட்டுத்தபானம் | - | 100 | - |
| அரச மருந்தாக்கற் கூட்டுத்தபானம் | - | 100 | 100 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் | 782 | 1,824 | 1,508 |
| புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் | - | 2,000 | 650 |
| தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | - | 15 | 25 |
| இலங்கை முதலீட்டுச் சபை | 156 | - | 416 |
| தேசிய லொத்தர் சபை | - | 900 | 261 |
| இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம் | - | 25 | - |
| மத்திய பொறியியல் ஆலோசனைச் சேவைப் பணியகம் | - | 25 | - |
| சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை | - | 50 | - |
| அரச மருந்துப்பொருட் கூட்டுத்தபானம் | - | - | 128 |
| தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் | - | 110 | 290 |
| தேசிய ஔடத ஒழுஙகுபடுத்தல் அதிகார சபை | 81 | 147 | 400 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 4,000 | 4,000 | - |
| நில சீர்திருத்த ஆணைக்குழு | - | 1,100 | - |
| காண்டோமினியம் முகாமைத்துவ அதிகாரசபை | - | 25 | - |
| தேசிய வணிக மேலாண்மை நிறுவனம் | - | 16 | 33 |
| இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம் | - | 5 | - |
| மேலாண்மை முதுகலை நிறுவனம் | - | - | 50 |
| பங்கிலாபம் | 2,854 | 4,672 | 1,838 |
| தேசிய சேமிப்பு வங்கி | 60 | 60 | 30 |
| இலங்கை வங்கி | 346 | 346 | 173 |
| மக்கள் வங்கி | 316 | 316 | 158 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 1 | 1 | 0.9 |
| இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம் லிமிடெட் | 695 | 899 | 755 |
| இலங்கை கனிய மணல் லிமிடெட் | - | 700 | 359 |
| இலங்கை பொஸ்பேட் லிமிடெட் | - | 20 | 15 |
| லங்கா லேலாண்ட் லிமிடெட் | 2 | 3 | - |
| மன்னாய் சோல்ட் லிமிடெட் (தேசிய சோல்ட் கம்பனி) | 2 | 14.8 | - |
| சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் | 304 | 29 | - |
| பரந்தன் இரசாயனக் கம்பனி லிமிடெட | 10 | 3 | 50 |
| ஸ்ரீ லங்கா டெலிகொம் | 947 | 1,331 | - |
| டி லா ரூ லங்கா லிமிடட் | - | 345 | - |
| லங்கா மின்சாரக் கம்பனி லிமிடெட் | - | 327 | 218 |
| இலங்கை கைத்தொழில் பெருந்தோட்டக் கம்பனி லிமிடெட் | 82 | 82 | - |
| சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் | 77 | 95 | 24 |
| பெருந்தோட்டக் கம்பனிகள் | 12 | 98 | 48 |
| ஏனையவை | - | 2.2 | 7 |
| **மொத்தம்** | **17,623** | **30,591** | **11,399** |

மூலம் : அரசுடமைத் தொழில் முயற்சிகள் மற்றும் பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களம்

# அத்தியாயம் 4

# வெளிநாட்டு நிதியளிப்பு

## மேன்நோக்கு

2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியைத் திரட்டுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு இணங்க, 2022 ஆம் ஆண்டில் அதிக முன்னுரிமையுள்ள கருத்திட்டங்களுக்கு மற்றும் நிதித் தேவைகளுக்கு நிதியளிப்பதை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது. அதற்கிணங்க, 2022 இல் அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காகவும் கல்வித் துறைக்காகவும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றது.

## வெளிநாட்டு நிதியுதவி உறுதியளிப்புக்கள்

2022 இல் ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 வரை பொது முதலீட்டு திட்டத்திற்கு ஆதரவாக வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களுடன் 4 ஒப்பந்தங்களை மேற்கொண்டு ஐ.அ.டொலர் 1550.5 மில்லியன்களை வெளிநாட்டு நிதியுதவியாகத் திரட்ட அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது இது எக்சிம் (EXIM) வங்கி மற்றும் இந்தியா அரச வங்கி ஆகியவற்றால் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காக நீடிக்கப்பட்ட ஐ. அ டொலர் 1,500.0 மில்லியன் ஏற்றுமதிக் கடன் வசதிகளையும், குவைத் அரசாங்கத்தால் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவம் மற்றும் உபகரண வசதிகளை நிர்மாணிப்பதற்காக நீடிக்கப்பட்ட ஐ. அ டொலர் 32.9 மில்லியகளையும் மற்றும் மாத்தறையில் தொழிற்பயிற்சி நிலையத்தை அமைப்பதற்காக ஜேர்மனி கூட்டாட்சிக் குடியரசு அரசாங்கத்தால் நீட்டிக்கப்பட்ட ஐ. அ. டொலர் 17.6 மில்லியன்னையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் முதல் காலாண்டில் வெளிநாட்டு நிதி திரட்டும் செயல்திறன் பெரிதும் பாதிக்கப்பட்டது.

## வெளிநாட்டு நிதிப் பகிர்வுகள் மற்றும் பயன்பாடு

2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த வெளிநாட்டு நிதிப் பகிர்வான ஐ.அ.டொலர் 968.8 மில்லியன்களில், ஐ.அ.டொலர் 968.1 மில்லியன்கள் கடனாகவும், ஐ.அ.டொலர் 0.7 மில்லியன் மானியமாகவும் பகிரப்பட்டது.

பெரும்பாலான பகிர்வுகள் இந்தியாவுடன் கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தங்களில் இருந்து பெறப்பட்டவை, இது ஏறக்குறைய 39 சதவீதமாகும், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சீனா முறையே 37 மற்றும் 7 சதவீதங்களாக காணப்படுகிறது.

மின்சாரம் மற்றும் எரிசக்தித் துறைசார்ந்த அமுல்படுத்தபடும் கருத்திட்டங்களுக்கே பெரும்பாலான பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டன, இது மொத்த பகிர்வுகளில் ஏறக்குறைய 41.57 சதவீதம் ஆகும், தொடர்ந்து, வீதிகள் மற்றும் பாலங்கள் துறை 21.5 சதவீதம், சுகாதாரம் மற்றும் சமூக நலத்துறை 10.97 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் துறை 6.32 சதவீதம், நீர்ப்பாசனம் 6.07 சதவீதம் தரைவழி போக்குவரத்து 5.5 சதவீதம் மற்றும் கல்வித்துறை 3.13 சதவீதங்களாகவும் காணப்படுகிறது.

**அட்டவணை 4.1 : 2022 சனவரி 1 முதல் ஏப்பிரல் 30 வரையில் வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களின் பகிர்வுகள்**


| அபிவிருத்திப் பங்காளர் | பகிர்வுகள் (ஐ.அ.டொலர் மில்லியன்)* | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| **இருதரப்பு** | **536.0** | **0.7** | **536.7** |
| சீனா | 67.9 | | 67.9 |
| யப்பான் | 42.3 | | 42.3 |
| பிரான்ஸ் | 20.8 | | 20.8 |
| இந்தியா | 376.9 | | 376.9 |
| நெதர்லாந்து | 13.7 | | 13.7 |
| ஐக்கிய இராச்சியம் | 2.3 | | 2.3 |
| குவைட் | 5.1 | | 5.1 |
| ஆஸ்திரியா | 0.71 | | 0.7 |
| கொரியா | 2.1 | | 2.1 |
| ஸ்பெயின் | 1.3 | | 1.3 |
| ஜேர்மனி | | 0.7 | 0.7 |
| ஹங்கேரி | 2.9 | | 2.9 |
| **பல்தரப்பு** | **432.1** | | **432.1** |
| உலக வங்கி | 67.3 | | 67.3 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 359.6 | | 359.6 |
| ஒபெக் நிதியம் | 2.4 | | 2.4 |
| விவசாய அபிவிருத்திற்கான சர்வதேச நிதியம் | 2.7 | | 2.7 |
| **மொத்தம்** | **968.1** | **0.7** | **968.8** |

மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

குறிப்பு : வித்தியாசமான நாணய அலகுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பகிர்வுகளை ஐ.அ.டொலரிற்கும் ரூபாவிற்கும் மாற்றியமைப்பதற்காக 2022 ஏப்பிரல் 30 ஆம் திகதியில் காணப்பட்ட செலாவணி வீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

* தற்காலிகமானது

**வரைபு 4.1 : 2022 சனவரி 01 முதல் ஏப்பிரல் 30 வரை துறை ரீதியான பகிர்வுகள் (ஐ.அ.டொ.மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

**அட்டவணை 4.2 : நியதிகளுடனான வெளிநாட்டு நிதியளிப்பு உறுதியளிப்புகள் - 2022 சனவரி 1 முதல் ஏப்பிரல் 30 வரையில்**

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் முகவர் நிறுவனம் | சாதன வகை | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்/ சாதனத்தின் பெயர் | உறுதியளிக்கப்பட்ட தொகை (மில்லியன்) | | | | நிதி நியதிகள் | | | | பிற நியதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | வட்டி | | | பிற கட்டணங்கள் | | |
| | | | | நாணயம் | சாதன நாணயம் | ரூபா | ஐ.அ.டொ. | வகை | வருடாந்த விகிதம் (%) | வரையறை (100 அடிப்படைப்புள்ளி) | | சலுகைக் காலம் (ஆண்டுகள்) | முதிர்ச்சி/ உடன்படிக்கைத் திகதியிலிருந்தான எஞ்சிய காலம் (ஆண்டுகள்) |
| இருதரப்பு | | | | | | | | | | | | | |
| குவைட் | கடன் | 2/3/2022 | மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தை நிர்மாணித்தல் மற்றும் உபகரணமளிக்கும் திட்டம் | கு.தினார் | 10 | 6,638.9 | 32.9 | நிலையான | பாவனையில் இல்லை | 1 | உறுதியளிப்புக் கட்டணம் 0.5% | 6 | 26 |
| இந்தியா | கடன் | 2/2/2022 | ஐ.அ.டொ. 500 மில்லியன் குறுகிய கால கடன் | ஐஅடொ | 500 | 100,710.3 | 500.0 | மாறக்கூடிய | SOFR 6M | 1.5 | உறுதியளிப்புக் கட்டணம் 0.5% | 1 | 1 |
| | கடன் | 3/17/2022 | 2022 ஆம் ஆண்டிற்கான அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி (ஐ.அ.டொ. -1000) | ஐஅடொ | 1,000 | 267,862.0 | 1,000.0 | நிலையான | SOFR 3M | 1.6 | | 3 | 3 |
| ஜேர்மனி | கடன் | 1/27/2022 | மாத்தறை திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையத்தை நிறுவுதல் | யூரோ | 15.7 | 3,561.6 | 17.6 | மாறக்கூடிய | பாவனையில் இல்லை | 2 | | 10 | 30 |
| **மொத்தம்** | | | | | | **378,772.8** | **1,550.5** | | | | | | |


மூலம்: வெளிநாட்டு வளத் திணைக்களம்
ஒவ்வொரு ஒப்பந்தத் திகதியின்மாற்று விகிதங்களிற்கேற்ப, வெவ்வேறு நாணயங்களில் உள்ள நிதி மதிப்புகள் ஐ.அ.டொலர் மற்றும் ரூபாவாக மாற்றப்பட்டுள்ளன.

## உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி

2022 ஏப்ரல் 30, நிலைமைக்கேற்ப ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட கடன்களில் இருந்து கிடைக்கும் வெளிநாட்டு நிதியுதவியின் மொத்த பகிரப்படாத மிகுதி ஐ.அ.டொலர் 8,054.3 மில்லியன்கள் அடுத்த 3-5 ஆண்டுகளில் பயன்படுத்தப்படும். பகிரப்பட வேண்டிய மிகுதியின் பெரும்பகுதியை இந்தியா கொண்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, சீனா மற்றும் ஜப்பான் ஆகியவை காணப்படுகின்றன.


உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மிகுதியில் ஏறக்குறைய 21 சதவிதம் வீதிகள் மற்றும் பாலங்கள் துறையிலும், அதே சமயம் 16 சதவீதம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திற்காகவும் 13 சதவீதம் வர்த்தக துறைக்காகவும் பயன்படுத்தப்படவிருக்கிறது.

**வரைபு 4.2 : 2022 ஏப்பிரல் 30 வரையில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி (ஐ.அ.டொ.மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

**வரைபு 4.3 : 2022 ஏப்பிரல் 30 வரையில் அபிவிருத்திக் கருத்-திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு துறை ரீதியாக உறுதியளிக்கப்பட்டு பகிரப்படாத மீதி (ஐ.அ.டொ.மில்லியன்)**





மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

## வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள்

பொருளாதார மீட்பு திட்டத்தை வடிவமைப்பதில் மற்றும் அவசர நிதி உதவிக்காக சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உதவியைப் பெறுவதற்கான வாய்ப்பை அரசாங்கம் தேடத் தொடங்கியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுப் பொதுக் கடனை முழுமையாக நிலையான நிலைக்கு மீட்டெடுப்பதற்காக நாட்டின் கடன் வழங்குநர்களுக்கு ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கி முன்வைக்கும் நோக்கில், சர்வதேச நாணய நிதியத்துடனான அதன் விவாதங்களை முடிந்தவரை விரைவாக தொடரும் நோக்கம் காணப்பட்டது. இதற்கேற்ப சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித் திட்டத்திற்கிசைவாக ஏப்ரல் 12, 2022 இன இடைக்காலத்திற்கு, கடமைகளை சீரான, ஒருமித்த மறுசீரமைப்பு முறையில் இருதரப்பு மற்றும் வணிகக் கடனாளிகளின் வெளிநாட்டுக் கடனை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்துள்ளது.

2022 ஏப்ரல் இறுதிக்குள், அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஐ.அ.டொலர் 35.04[1] பில்லியன்களாக இருந்தது. ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30, 2021 வரையிலான மொத்தக் கடன் சேவைப் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 1,443.7 மில்லியன்கள், இதில், ஐ.அ.டொலர் 1,084.2 மில்லியன் அடிப்படையை மீளச்செலுத்துவதற்காகவும்,மீதித் தொகையான ஐ.அ.டொலர் 359.6 மில்லியன் வட்டி செலுத்துவதற்காகவும் காணப்பட்டது.

**வரைபு 4.4 : 2022 சனவரி முதல் ஏப்பிரல் வரையான படுகடன் சேவை கொடுப்பனவுகள் மற்றும் 2022 இன் எஞ்சிய காலத்திற்கான எதிர்வுகூறல் (ஐ.அ.டொ. மில்லியன்)**




மூலம் : வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

[1] குடியிருக்காதவர்களின், சொத்துக்கள் திறைசேரி உண்டியல்கள்/பத்திரங்களின் மற்றும் அரசுடமை நிறுவனங்களின் (SOEs) நிலுவையில் உள்ள கடன்கள் சேர்க்கப்படவில்லை.

[2] கடன் சேவை = முதன்மை கொடுப்பனவுகள் +வட்டி செலுத்துதல்கள்,
அரசுடமை நிறுவனங்களின் கடன் சேவை கொடுப்பனவுகள் சேர்க்கப்படவில்லை

[3] ஐ. அ. டொலர் மதிப்பீடுகள் 30 ஏப்ரல் 2022 இல் உள்ள மாற்று விகிதங்களை அடிப்படையாகக் கொண்டவை.ஏற்கனவே உள்ள கோப்புகளின் அடிப்படையில் மட்டுமே முன்னறிவிப்பு செய்யப்பட்டது,